விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 20 சனிக்கிழமை (03.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இனவாதிகளுக்கு மகிந்த ஆதரவு!



## ஊடக அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டு

**(கொழும்பு) நாட்டில் இனவாதத்தை தூண்டி இன வன்முறைகளை கட்டவிழ்த்து விட முயற்சிக்கும் தரப்புக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பே ஆதரவு வழங்கி வருவதாக அரசாங்கத்தின் புதிய நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.**

முன்னாள் வெளிவிகார அமைச்சர் நேற்று ஊடகத்துறை அமைச்சர் பதவியை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்ட நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

ஜனாதிபதியினால் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது நிதி அமைச்சுடன் ஊடகத்துறை அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்ட அமைச்சர் மங்கள சமரவீர நேற்று ஊடகத்துறை அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்காக ஊடகத்துறை அமைச்சிற்கு சென்ற அமைச்சர் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றும் அதிகாரிகளையும், அரசாங்க தகவல் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

-இதன்போது மைத்திரி- ரணில் தலைமையிலான தற்போதைய தேசிய அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர தெளிவுபடுத்தினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

முக்கிய மூன்று விடயங்களின் அடிப்படையில் அரசாங்கத்தின் கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகிய மூன்று விடயங்களின் அடிப்படையில் அரசாங் 23☛

## டெங்கு நோய் மருந்துகளில் பற்றாக்குறை!

(கொழும்பு)
டெங்கு நோய் தீவிரமடைகின்ற போது நோயாளர்களின் உயி 23☛

## உயிரிழப்புகள் 208 ஆக உயர்வடைவு

(கொழும்பு)
நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் உருவான மண்சரிவு 23☛

## க.பொ.த (சா/த) பரீட்சைக்கான விண்ணப்ப நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் 23☛

## பாடசாலை மாணவியுடன் தகாது நடந்த ஆசிரியர்!

### சந்தேகத்தின் பேரில் கைது

(பரந்தன்)
கிளிநொச்சி கண்டாவளைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்ற க.பொ.த உயர்தர வகுப்பு மாணவி ஒருவரை நேற்றையதினம் கருத்தமர்வு எனகூறி அப்பாடசாலையில் கணித பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ள நிலையில், அவர் தகாத முறையில் நடக்க முற்பட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மாணவி 23☛

## காணாமல் ஆக்கப்பட்டோர் நூறாவது நாளாக வவு. போராட்டம்!

(வவுனியா)
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி வவுனியாவில் தொடரும் போராட்டமும் நூறாவது நாளை எட்டியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு வாரங்களுக்குள் சந்திப்பதாக உறுதியளித்தபோதிலும் காணாமல் ஆக்கப்பட்டு 23☛

## 115020 பேர் முல்லையில் பாதிப்பு!

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை நீடித்துவரும் வரட்சி காரணமாக ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 20 பேர் பாதிக்கப்பட்டு 23☛

## யாழ்.வாள்வெட்டு குழுவினரிடம் கியூ பிரிவினர் தீவிர விசாரணை

### இலங்கையிலிருந்து அழுத்தமில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேவா, பிரகாஸ் மீது இந்திய புலனாய்வு துறையான கியூ பிரிவினர் தொடர்ச்சியான தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் குறித்த நபர்களுக்கு எதிராக இலங்கை பொலிஸாரால் எந்தவித அழுத்தங்களும் இதுவரை பிரயோகிக்கப்படவில்லை என இந்தியாவில் இருந்து கியூ பிரிவு பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா திருச்சியில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த நிலையில் 23☛

## இயற்கை அனர்த்தம் இடைக்கால அறிக்கை ரணிலிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அனர்த்தங்கள் சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசங்கள் மற்றும் மக்களின் பொருளாதார செயற்பாடுகளை மீண்டும் வழமைக்கு கொண்டு வரும் நோக்கில் இந்த அறிக் 23☛

## இன்னும் 50 வருடங்களில் யாழ்ப்பாணம் பாலைவனமாகும்!

### அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)
உலக வெப்பமயமாதல் மற்றும் பொருத்தமற்ற கட்டட நிர்மாணங்கள் காரணமாக எதிர்வரும் 50 வருடங்களில் யாழ்ப்பாணம் அரை பாலைவனமாக மாறும் வாய்ப்பு இருப்பதாக பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

தாய்நாட்டு கோரிக்கைக்காக கூச்சலிடுவதற்கு முன்னர் தமது நிலங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், தற்போது யாழ்ப்பாணத்தை மூலோபாய முறையில் அபிவிருத்தி செய்து அந்த சூழலை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடி 23☛

## ஞானசாரரின் கைதை தடுக்கும் விஜயதாச!

(கொழும்பு
ஞானசார தேரரை கைது செய்யவிடாமல் அழுத்தம் கொடுக்கும் அந்த பிரபலம் வேறு யாரும் அல்ல, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவே என கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி குற்றம் சாட்டியுள்ளார். 24☛

## பெண் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)
வாக்களிப்பின் ஊடாகவே இந்த நாட்டுப் பிரஜைக்கு அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள உண்மையான அதிகாரம் பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த 24☛

## மூடிய பாடசாலைகள் 5-ம் திகதி திறப்பு

(கொழும்பு)
நாட்டில் அண்மைக் காலமாக ஏற்பட்டிருந்த இயற்கை அனர்த்தம் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் கேகாலை ஆகிய 8 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகள் மீண்டும் நாளை மறுதினம் 5-ம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளத்தினால் பாதிக் 23☛

## பிரிவினைவாதிகள் எவராயினும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(அநுராதபுரம்)
பிரிவினைவாத செயற்பாடுகளை முன்னெடுப்பது எவராக இருந்தாலும் தகுதி தராதரம் பாராது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். 24☛



## நாமல் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு

(கொழும்பு)
பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் இரண்டு அதிகாரிகளிடம் 200 மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி, நாடாளுமன்ற 24☛

## பத்து படகுகளை அனுப்பியது அவுஸ்.

(கொழும்பு)
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, அவுஸ்ரேலிய அரசாங்கம் முதற்கட்டமாக 10 இறப்பர் படகுகள் மற்றும் இயந்திரங்கள் கொண்ட உதவிப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இயற்கை பேரிடர்

# அழிந்த வீடுகளுக்கு 25 இலட்சம் உயிரிழந்தவருக்கு ஓர் இலட்சம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

கடந்தவாரம் ஏற்பட்ட வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்தத்தில் சிக்குண்டு இறந்த ஒவ்வொரு நபருக்குமான நஷ்டஈடாக ஓர் இலட்சம் ரூபாயை வழங்கவும் முற்றாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தலா 25 இலட்சம் என்ற அடிப்படையில் வழங்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். மண்சரிவு பாதிப்பில் இருக்கும் நபர்களுக்கு மாற்று இடங்களை வழங்கி குறித்த பகுதிகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளை எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்த வேண்டாம் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

வெள்ள அனர்த்தம் மற்றும் மண்சரிவு அபாயம் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் சகல அமைச்சர்களை நேற்றுமுன்தினம் சந்தித்திருந்தார். இந்த சந்திப்பின் போது அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவைகளை செய்யும் வகையில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த சந்திப்பில் அனைத்து அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் சகல மாவட்டங்களின் பிரதேச செயலகங்களுக்கும் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொண்டு அதற்கமைய மக்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபைகளுக்கான அதிகாரங்கள் மற்றும் தேவைகளை அரசாங்கம் வழங்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அரச தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, ஜனாதிபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அறிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்.

அனர்த்தத்தில் ஏற்பட்ட சேதங்களை கணக்கெடுக்கும் வகையில் குறித்த மாவட்டங்களுக்கு அரச அதிகாரிகளை ஜனாதிபதி நியமிதுள்ளார். இவர்கள் மூலமாக பொருள சேதங்கள், சொத்து விபரங்கள் முழுமையாக கணக்கெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நஷ்டஈடுகள் அனைத்தும் கவனத்தில் கொண்டு சரியான வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் முழுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25 இலட்சம் ரூபாய் நஷ்டஈடும், பகுதியளவில் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பில் சேதத்திற்கு அமைய நிதி வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

உயிரிழந்த ஒவ்வொரு நபர்களுக்கான நஷ்டஈடாக அந்தந்த குடும்பங்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள், சிறு வியாபாரிகள் ஆகிய அனைவருக்கும் அவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சேதங்களுக்கு அமைய அவர்களுக்கான நஷ்டஈடு வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதேபோல் இலகு தவணை அடிப்படையில் வங்கிக் கடன்களை வழங்கவும் அரசாங்கத்தினால் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்

பாதிக்கப்பட்ட பகுதிகளில் முப்படைகளின் மீட்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் துரிதமாக அவர்களை ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் கிணறுகளில் உள்ள நீரை அகற்றும் நடவடிக்கைளை மேற்கொள்ள அதற்கான தொழில்நுட்ப மற்றும் மனித வளங்களை நியமிக்கவும் தொண்டு நிறுவனங்களின் மூலமாக மக்களுக்கான உதவிகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீர்நிலைகளில் குளோரின் இடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கான குடிநீர் தேவைகளை வழங்கவும் சகல அதிகாரிகளுக்கும் வலியுறுத்திய ஜனாதிபதி, சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான உடனடி தேவைகள் மற்றும் மருத்துவ வசதிகளை எந்த நேரமும் வழங்கும் வகையில் அவசர வைத்திய பிரிவுகளை நியமிக்கவும் வலியுறுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான அமைச்சர்கள் தத்தமது பிரிவுகளில் செயற்படும் அதே நிலையில் பாதிக்கப்படாத பகுதிகளை சேர்த்த அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு பிரிவுகளை பொறுப்பேற்று அடுத்த மூன்று மாத காலத்துக்கான சேவைகளை வழங்கவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்கள். பிரதியமைச்சர்கள் சேவையாற்றும் பகுதிகளை தீர் மானித்து உடன டியாக அறிக்கை தயாரிக்குமாறும் சகலருக்கும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் மண்சரிவுகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான மாற்று இடங்களை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறிப்பாக இரத்தினபுரி பகுதியில் மண்சரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக குறித்த இடத்தில் இருந்து வெளியேற்றி அந்த பகுதிகளை அரசாங்கம் தனதாக்க வேண்டும் எனவும் உரிய மக்களுக்கு பாதுகாப்பான இடங்களில் மாற்று வீடுகளை அமைத்து கொடுக்கவும் வலியுறுத்தியுள்ளார். பாதிக் கப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் புதிதாக சீருடைகள், பாடப்புத்தகங்கள், சப்பாத் துக்கள் மற்றும் ஏனைய தேவைகள் அனைத்தையும் வழங்க கல்வி அமைச்சு பொறுப்பேற்க வேண்டும் எனவும் நிதி அமைச்சின் பூரண உதவிகளை பெற்றுக் கொள்ளுமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்தங்களுக்கு இலங்கை தொடர்ச்சியாக முகங்கொடுத்து வரும் நிலையில் எதிர்காலத்தில் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து மக்களை முன்னாயத்தமாக செயற்படும் நடவடிக்கைகள் மற்றும் அனர்த்தங்களை சமாளிக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் அழிவுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். இதுவரையிலான காலம் வரையில் பாதிப்புகளுக்கான மக்களுக்கான 126 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தேவைகளுக்கான நிதியையும் ஒதுக்க ஜனாதிபதி தயாராக உள்ளார் என்றார். (செ-11)

---

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதிக்கு சமையல் வேலை தெரிந்த இரவு/பகல் நேர ஆண் தொழிலாளி தேவை.

**தொடர்பு :**
**0779530496, 0212222478**

(9117)

---

ஓம் ஸ்ரீ சாயி ராம்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்**

யாழ் மத்தி, சங்கிலியன் வீதி, நல்லூர்.

**ஸ்ரீ சாயிகணபதி சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம்**

காலம்: 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை

விநாயக வழிபாடுகளுடன் கிரியைகள் ஆரம்பம்
03.06.2017 சனிக்கிழமை மாலை 5.30

எண்ணெய்க்காப்பு சாத்துதல்
03.06.2017 சனிக்கிழமை இரவு 7.30 முதல்
04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 வரை

மகா கும்பாபிஷேகம்
04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 - 12.30
மதியபோசனம் வழங்கப்பெறும்

*அன்பர்கள் அனைவரும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து ஸ்ரீ சாயிகணபதியின் திருவருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

ஜெய் சாயிராம்



சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(9110)

---

# இளைஞர்கள் ஆயுதமேந்துவர்!

(கொழும்பு)

நாட்டில் சட்டம் நடுநிலையாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் சட்டத்தை நடுநிலையாக்குவதற்கு இளைஞர்கள் ஆயுத ங்களைக் கையில் ஏந்த நேரிடும் என அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பாரபட்சமான அபிவிருத்தி செயற்பாடுகளால் சமநிலையற்ற சட்டங்களில் நடுநிலையற்ற தன்மை தோன்றியுள்ளது.

இதேவேளை மலையகத்தில் வாழும் மக்களுக்கு காணிகள் பிரித்து வழங்கப்படுவதால் பயிர்ச்செய்கை நிலங்கள் பாரியளவில் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

# வாகன விபத்து; இளைஞர் காயம்

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்கு உள்ளான இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் புலோலி - கொடிகாமம் வீதியில் உள்ள போதராமடம் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் வெள்ளிருவை, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகணேசன் (வயது-33) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு மேல்திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (செ-60)

---

# இயல்புநிலைக்கு திரும்பும்

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்

(கொழும்பு)

இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் இயல்பு நிலைக்கு திரும்பத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அனர்த்தங்கள் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்திருந்த குடும்பங்களில் பெரும்பாலானவை தங்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

ஏற்கெனவே அரசு பேரிடர் முகாமைத்துவமையம் வெளியிட்டுள்ள தகவல் அறிக்கையில், 25 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த சுமார் ஓர் இலட்சத்து 25 ஆயிரம் பேர் வரை பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அனர்த்தங்கள் ஏற்பட்டு ஒரு வாரம் கடந்து விட்ட நிலையில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்கள் உயிருடன் இருப்பது தொடர்பில் உறவினர்களில் பலரும் நம்பிக்கையிழந்தே தற்போது காணப்படுகின்றனர்

அரசு பேரிடர் முகாமைத்துவ மையத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

1719 வீடுகள் முழுமையாகவும் 10 ஆயிரத்து 477 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளாள 175 ஆயிரத்து 514 குடும்பங்களின் 6 இலட்சத்து 74 ஆயிரத்து 558 பேரில், 17 ஆயிரத்து 474 குடும்பங்களை சேர்ந்த 65 ஆயிரத்து 45 பேர் 312 பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்த பிரதேசங்களில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தங்கியுள்ள மற்றும் முழுமையாக சேதமடைந்த பாடசாலைகள் தவிர ஏனையவற்றை எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் திறக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. (செ-11)

---

## விசேட பொதுக்கூட்டம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் விசேட பொதுக்கூட்டம் 05.06.2017 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆயுட்கால அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள், ஏனைய அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு:** 27.04.2017 இல் நடைபெற்ற கூட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே இவ்விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

கோ.பத்மநாதன்
செயலாளர்

(C-8706)

---

## காணி, வீடு விற்பனைக்கு

A-9 வீதி, அரியாலையில் 3 1/2 பரப்புக் காணியும் தபால் நிலைய வீதி, சாவகச்சேரியில் 17 பரப்புக் காணியும் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு:-
**T:P- 077 986 5761**

(9118)

---

## தேவை

திருநெல்வேலியிலுள்ள எமது பட்டய கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்கியல் பயிலுநர்கள் தேவை.
A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர், Chartered, CIMA, HNDA Students விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு :-**
**077 9530 496**

(9117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்.வெளிநாட்டுக்கொள்கையின் வெற்றியை நிவாரணப் பொருட்கள் வெளிப்படுத்தியுள்ளன

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இயற்கை அனர்த்தத்துக்குள்ளான இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சர்வதேச சமூகம் அர்ப்பணிப்புடன் முன்வந்தமை தற்போதைய அரசாங்கத்தின் நட்புறவான வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



இலங்கைக்கு வருகை தந்துள்ள மாலைதீவு வெளிநாட்டமைச்சர் கலாநிதி மொஹமட் அஸீம் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக மாலைதீவு அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்காக ஜனாதிபதி மாலைதீவு அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த மாலைதீவு வெளிநாட்டு அமைச்சர், பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

திடீர் அனர்த்தத்தினால் மரணமடைந்தோரின் குடும்பங்களுக்கு மாலைதீவு அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை மாலைதீவு வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் உறவுகளை நினைவூட்டிய ஜனாதிபதி இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் அனைத்து உறவுகளையும் பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் சுற்றுலா செல்லும் சிலர் குற்றம் மற்றும் கடத்தல்களில் ஈடுபடுவது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென தெரிவித்த ஜனாதிபதி அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாலைதீவு வெளிநாட்டமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன், மாலைதீவு உயர்ஸ்தானிகர் Zahiya Zareer ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-7)

## காணாமற் போனோரின் உறவினர்களால் 80வது நாளாக மருதங்கேணியில் கவனயீர்ப்பு





காணாமற் போனோரின் உறவினர்களால் மருதங்கேணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 80 ஆவது நாளாகவும் நடைபெற்றது.

காணாமற் போனோரின் உறவினர்கள் வடபகுதியில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் மருதங்கேணியில் உள்ள பிரதேச செயலகத்திற்கு முன்பாக 14.03.2017 அன்று ஆரம்பமான கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை (02.06.2017) 80 ஆவது நாளை எட்டியுள்ளது. (இ-60)

## தாஜுடீன் வழக்கு; அநுரவுக்கு பிணை

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.

அவரை 10 இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலும் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற பிரதான நீதிபதி மணிலால் வைத்தியதிலகஅனுமதித்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதி, அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதித்தார்.

தாஜுடீன் படுகொலைக்கு உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த வருடம் மே மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உதய கம்மன்பில வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி



பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளிநாடு செல்வதற்காக கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாதம் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலத்திற்குள் உதய கம்மன்பில வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் உதய கம்மன்பிலவின் கடவுச்சீட்டை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். குருசிங்க உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## மகிந்தவின் தூரநோக்கற்ற தீர்மானங்களே தெற்கில் அழிவுகள் ஏற்படக்காரணம்-டிலான்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தூர நோக்கற்ற செயற்பாடுகளே தென் மாகாணத்தில் பாரியளவு அழிவுகள் ஏற்படக் காரணம் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட போது அப்போதைய அரசாங்கம் இயற்கை பாதிப்புக்கள் மற்றும் சுற்றாடல் காரணிகள் குறித்து கவனம் செலுத்தவில்லை என குற்றம் சுமத்தியுள்ள அவர் தாமும் அந்த அமைச்சில் அங்கம் வகித்த ஒருவரே எனவும்தெரிவித்தார்.

எனினும், அப்போதைய அரசாங்கம் சுற்றாடல் காரணிகளை கருத்திற் கொண்டு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்திருந்தால் இத்தனை அழிவுகள், உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்காது என அவர் தெரிவித்தார். அதிவேக நெடுஞ்சாலைகள் மிகவும் அவசியமானது என்றபோதிலும் சுற்றாடல் காரணிகள் கருத்திற் [illegible] ங்கள் வேறும் ஆபத்துக்களை உண்டாக்கும் என அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி வழங்கியுள்ளது. மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் 3 இலட்சம் யூரோக்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

தொண்டு நிறுவனங்களின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐரோப்பிய வாழ் மக்கள் வழங்கும் உதவியாக இதனை கருதுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அனர்த்த முகாமைத்துவ ஆணையாளர் கிறிஸ்டோஸ் ஸ்டாலியான் டீஸ் தெரிவித்துள்ளார்.

சுத்தமான குடிநீர், வீட்டு அத்தியாவசிய உபகரணங்கள் உள்ளிட்டன பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட உள் ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோனி, யுவராஜினால் சிறந்த பினிஷிங்கை கொடுக்க முடியாது - மொகமட் அசாருதீன்



பழைய மாதிரி தோனியும், யவராஜ் சிங்கும் இனிமேல் அதே அளவிலான சிறந்த பினிஷர் கிடையாது என்று அசாருதீன் கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா நாளை (4ஆம் திகதி) பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. 15 பேர் கொண்ட இந்திய அணியில் யுவராஜ் சிங மற்றும் தோனி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இருவரும் சிறப்பாக விளையாடினால் இந்தியா கோப்பையை வெல்ல வாய்ப்புள்ளது என்று இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி கூறியிருந்தார்.

ஆனால், தோனி மற்றும் யுவராஜ் சிங்கால் பழைய மாதிரி போட்டியை சிறப்பாக முடித்து வைக்க இயலுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் பழைய மாதிரி தோனி மற்றும் யுவராஜ் சிங்கால் இனி மேல் போட்டியை பினிஷ் செய்ய இயலாது என்று முன்னாள் அணித் தலைவர் மொகமட் அசாருதீன் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மொகமட் அசாருதீன கூறுகையில் "தோனி மற்றும் யுவராஜ் சிங்கால் பழைய மாதிரி இனி மேல் போட்டியை சாதகமாக முடிக்க முடியாது. அவர்கள் 14 முதல் 15 வருடங்களாக கிரிகெட் விளையாடி வருகிறார்கள். அப்படி விளையாடும் போது தொடர்ந்து சிறப்பாக விளையாட முடியாது.

யுவராஜ் சிங்கின் ஆட்டம் இங்கிலாந்து மண்ணில் உகந்ததாக இருக்காது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து அணிகெதிராக சதம் அடித்தபின்னர், அவரது ஆட்டம் சிறந்ததாக அமையவில்லை என்றார்.

யுவராஜ்சிங் 17 வருடத்திற்கு முன இதே தொடரில்தான் கென்யாவிற்கு எதிராக அறிமுகமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ் வோக்ஸ் விளையாடாவிட்டால் அணிக்கு மிகப்பெரும் இழப்பாகும்



பங்களாதேஷிற்கு எதிரான போட்டியின்போது காயத்தால் வெளியேறிய கிறிஸ் வோக்ஸ் விளையாட முடியாமல் போனால் பெரிய இழப்பாகும் என மோர்கன் கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் நேற்று முன்தினம் தொடக்க ஆட்டத்தில் போட்டியை நடத்தும் இங்கிலாந்து, பங்களாதேஷை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் தமிம் இக்பால் (128) சதத்தால் 305 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 306 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது. ஜோ ரூட் (133), ஹேல்ஸ் (95), மோர்கன் (75) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 47.2 ஓவரில் 308 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் இங்கிலாந்து களத்தடுப்பு செய்யும்போது கிறிஸ் வோக்ஸ் இரண்டு ஓவர்கள் வீசிய நிலையில் காயம் காரணமாக வெளியேறினார். அதன்பின் அவர் பந்து வீச வரவில்லை.

போட்டி முடிந்த பின் இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் பேட்டியளித்தார். அப்போது, கிறிஸ் வோக்ஸ் அணியில் இடம்பெறாவிடில் அது எங்களுக்கு மிகப்பெரிய இழப்பாகும் என்றார்.

இதுகுறித்து மோர்கன் கூறுகையில், இரண்டு ஓவர்கள் முடிந்த நிலையில் கிறிஸ் வோக்ஸ் மைதானத்தில



இருந்து வெளியேறி, பின்னர் பந்து வீச வராதது எங்களை கவலையில் ஆழ்த்தியது.

கடந்த இரண்டு வருடங்களாக அவர் எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த வீரராக இருந்து வருகிறார். காயத்தின் தீவிரம் குறித்து மருத்துவமனையில் ஸ்கான் எடுத்து பார்க்க இருக்கிறோம். அவர் இந்த தொடரில் விளையாடாமல் போனால், மிகப் பெரிய இழப்பாக இருக்கும் என்றார.

## டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு பெற்ற தோனிக்கு எதற்கு ஏ - கிரேட்



தற்போது வினோத ராய் தலைமையிலான நிர்வாக குழு இந்திய கிரிக்கெட் வாரிய பணிகளை கவனித்து வருகிறது.

இந்த நிலையில், நிர்வாக கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான ராமசந்திர குஹா திடீரென தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதுகுறித்து அவர் நிர்வாக கமிட்டி தலைவர் வினோத் ராய்க்கு எழுதி இருக்கும் கடிதத்தில், தனிப்பட்ட காரணத்துக்காக பதவியில் இருந்து விலகுவதாக குறிப்பிட்டுள்ளார். உச் சநீதிமன்றத்திலும் தன்னை விடுவிக்கும்படி மனு தாக்கல் செய்து உள்ளார்.

இந்த நிலையில், ராஜினாமா கடிதத்தில் பல்வேறு அதிருப்தியை ராமச்சந்திர குஹா வெளிப்படுத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ராமச்சந்திர குஹா அவரது ராஜினாமா கடிதத்தில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தோனிக்கு ஊதிய ஒப்பந்தத்தில் 'ஏ' கிரெட் வழங்கப்பட்டது ஏன்? இந்திய அணியின் பயிற்சியாளர் தேர்வு சரியான முறையில் கையாளப்படவில்லை.

கவாஸ்கருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்திய அணி மற்றும் ஐ.பி.எல். தொடர்பாக பணியாற்றுபவர்களுக்கு உள்ள இரட்டை ஆதாய பிரச்சினை உரிய முறையில கையாளப்படவில்லை. உள்ளூர் கிரிக்கெட் வீரர்களுக்கு சரியான அங்கீகாரம் அளிக்கப்படவில்லை" எனக் கூறியுள்ளார்.

ஏற்கெனவே, பி.சி.சி.ஐ அதிகாரிகளுக்கும், நிர்வாகக் குழுவிற்கும் இடையே சுமுகமான நிலை இருந்ததுகிடையாது. இந்நிலையில குஹாவின் புகார் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அவுஸ்திரேலியா - நியூசிலாந்து ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது. 9 ஓவர்கள் வீசிய நிலையில் மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் 46 ஓவர்களாக குறைக்கப்பட்டு ஆட்டம் தொடர்ந்தது. நியூசிலாந்து அணி 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்சன் சதம் அடித்து அசத்தினார். அவுஸ்திரேலிய பந்து வீச்சில ஹசில்வூட் 6 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து 292 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பிஞ், வோர்னர் களமிறங்கினர். பிஞ்





8 ஓட்டங்களுடனும் வோர்னர் 18 ஓட்டங்களுடனும் கென்றிகெஸ் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர் ஸ்மித் 8 ஓட்டங்களுடன் ஆட்மிழக்காமல் இருந்தபோது 9 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களை எடுத்த போது மழை குறுக்கிட்டதால் மீண்டும் போட்டி நிறுத்தப்பட்டு. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வீதம் வழங்கப்பட்டது.





## தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் அரையிறுதியில் இந்தியாவின் சாய்னா, சாய் பிரனீத் தகுதி





தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் தொடரின் அரையிறுதிக்கு இந்தியாவின் சாய்னா, சாய் பிரனீத் முன்னேறினர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில், கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மிண்டன் தொடர் நடக்கிறது. இதன பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாய்னா, ஜப்பானின் ஹருகோவை எதிர் கொண்டார். முதல் செட்டை 21-15 என கைப்பற்றிய சாய்னா, அடுத்த செட்டை 20-22 என பறிகொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் எழுச்சி கண்ட சாய்னா 21-11 என தன்வசப்படுத்தினார். ஒரு மணி நேரம் 9 நிமிடம் நடித்த போட்டியின் முடிவில், சாய்னா 21-15, 20-22, 21-11 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

### பிரனீத் முன்னேற்றம்

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாய் பிரனீத், தாய்லாந்தின் வாங்சரோனை சந்தித்தார். முதல் செட்டை 21-16 என கைப்பற்றிய பிரனீத், அடுத்த செட்டையும் 21-17 என தன்வசப்படுத்தினார். 50 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில், சாய் பிரனீத் 21-16, 21-17 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

## 'வின்டீஸ்' ஆகியது 'வெஸ்ட் இண்டீஸ்'

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் பெயர் "வின்டீஸ்" (Windies) என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் 91-வது ஆண்டு விழா தொடங்கியுள்ளது. இதை முன்னிட்டு, மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியத்தின் தலைமைச செயல் அதிகாரி ஜானி கிரேவ்ஸ் கூறியதாவது, இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளையும் முன்னேற்றத் திட்டமிட்டுள்ளோம். இன்னும் சில வருடங்களுக்கு, விளையாட்டு வீரர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றத் திட்டமிட்டுள்ளோம். இதுதொடர்பாக, விரைவில விவாதிக்க உள்ளோம். 2018-2023 ஆண்டுக்கான செயல் திட்டங்கள் விரைவில் வரையறுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் பெயர் "வின்டீஸ்" என்று மாற்றம் செய்யப்படுவதாக அவர் அறிவித்தார்.

## பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் 3ஆவது சுற்றுக்கு சிமோனா ஹாலப் தகுதி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3-ம் நிலை வீராங்கனையான சிமோனா ஹாலப், மரியாவை வென்று 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் பாரீஸ் நகரில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் 3-ம் நிலை வீராங்கனையான சிமோனா ஹாலப் (ருமேனியா) - மரியா (ஜெர்மனி) மோதினர். இதில் ஹால்ப் 6-4, 6-3 என்ற நேர்செட் கணக்கில் வென்று 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

2-ம் நிலை வீராங்கனையான செக்குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6-2, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் அலெக்ஸ்ட் ரோவாவை (ரஷயா) வீழ்த்தி 3-வது சுற்றுக்குள் நுழைந்தார்.

இதே போல ரட்லன்ஸ்கா (போலந்து), கார்னட் (பிரான்ஸ்), கார்சியா (பிரான்ஸ்) ஆகியோர் வெற்றி பெற்று உள்ளனர்.

அமெரிக்காவின் மெடிசன் கீஸ் 6-3, 3-6, 1-6 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் மார்டிக்சிடம் தோற்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா- கனடாவின் டப்ரோவ்ஸ்கி ஜோடி 6-0, 6-1 என்ற நேர் செட் கணக்கில் அவுஸ்திரேலியாவின் ரீட்- முர்ரே ஜோடியை வீழ்த்தி 2-வது சுற்றுக்கு முன்னேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் உயரதிகாரிகள் 12 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் உயரதிகாரிகள் 12 பேர் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 3 பேர் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 9 பேர் ஆகியோருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# யாழிலிருந்து தெற்கு மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டன

தெற்கில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு தேவையான அவசர நிவாரணப் பொருட்கள் நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.



அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் சேகரிக்கப்பட்டு வந்தன. அந்தவகையில் முதற்கட்டமாக ஒரு பாரவூர்தியில் குறித்த நிவாரணப் பொருட்களை நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் உதவிப் பொருட்கள் கிடைத்த வண்ணம் இருப்பதால் இரண்டாம் கட்டமாகவும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-9)

# கல்வீச்சுத் தாக்குதலில் கண்ணாடிப்பெட்டி சேதம்



(கரணவாய்)

முகத்தினை துணியினால் மறைத்துக் கொண்டு வந்த இருவர் மேற்கொண்ட கல்வீச்சுத் தாக்குதலில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டி சேதமடைந்தது.

மந்திகைச் சந்தைக்கு அருகாமையிலுள்ள பழக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு நேரம் மேற்படி வர்த்தக நிலைய உரிமையாளர் கடையினை மூடிக் கொண்டிருந்தபோது முகத்தினை வெள்ளைத்துணியினால் மூடிக்கொண்டு அருகில் உள்ள வாய்க்கால் வழியாக வந்த இருவர் கற்களை வீசியதாக கூறப்பட்டது. இதனால் அங்கு பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டி ஒன்று சேதமடைந்தது.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாலைதீவு அரசு நிதியுதவி



இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாலைதீவு அரசாங்கம் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக அளித்துள்ளது.

மாலைதீவு ஜனாதிபதியின் விசேட தூதுவர் டாக்டர் மொஹமட் அசிம் மற்றும் மாலைதீவின் வெளிவிவகார செயலாளர் ஆகியோர் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அவரது அமைச்சில் நேற்று சந்தித்து நிதியுதவிக்கான காசோலையை கையளித்தனர்.

வெள்ளத்தால் இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது கவலையை தெரிவித்த, மாலைதீவு ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர், இரு நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவது தொடர்பிலும் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் மீன்பிடித்துறை தொடர்பிலும் அமைச்சர் ரவிகருணாநாயக்கவுடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாகாண மட்ட ஒலிம்பியாட் பரீட்சை பிற்போடப்பட்டது

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் இன்று சனிக்கிழமை 3 ஆம் திகதி தரம் 6 இற்கான மாகாண மட்ட ஒலிம்பியாட் பரீட்சையைத் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இப் பரீட்சை தொடர்பாக அனைத்து தரம் 6 மாணவர்களுக்கும் தெரியப் படுத்தப்பட்டிருந்தது.

எனினும் தென்னிலங்கையில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையால்குறித்த பரீட்சையினை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப் பரீட்சையினை பிற்போட்டுள்ளதாகஅறியத் தந்துள்ளனர். பரீட்சைத் திகதி பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக தெரியப் படுத்தப்படும் என மாகாண கல்விப்பணிப்பாளர்செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'11''
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/6405

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 53 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் HNDA/அரசதொழில்
தொ.இ: B/6407

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 43 செவ்2இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA, MA/அரச தொழில்
தொ.இ: B/6408

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா:சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc/அரச தொழில்
தொ.இ: B/6409

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 67 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS, MD/ வைத்தியர்
தொ.இ: G/6432

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 31
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma/ தனியார் தொழில் இந்தியா
தொ.இ: G/6436

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 22 செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: AATஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6438

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/6439

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இராசி பலன்

03.06.2017
(வைகாசி 20, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
நவமி முற்பகல் 11.21 மணிவரை
உத்தரம் பிற்பகல் 5.32 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
பாபகர தசமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு சந் |

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், களஸ்திர நன்மையுண்டு.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உள்நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல்நலம் சீராகும்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வாகன சுகமுண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**சிம்மம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பணப் புழக்கம் கூடும்.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், தொழில் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் யாழ்.பொது நூலக எரிப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி இராணுவம், பொலிஸார் மற்றும் குண்டர்களால் யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு நேற்று முன்தினத்துடன் 36 ஆண்டுகள் நிறைவடைந்தன. இந் நிலையில் யாழ்.பொதுநூலக முன்றலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

# குண்டர் சட்டம் பாய்ந்ததைக் கண்டித்து யாழில் பாரிய கண்டனப் போராட்டம்





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை தமிழகத்தில் நடத்த முற்பட்டதால் குண்டர் சட்டத்தின் கீழ் திருமுருகன் காந்தி உட்பட தமிழர் விடியல் கட்சியின் தலைவர். செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டமையை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ள அக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிய கண்டனப் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இக் கண்டன போராட்டத்தில். ஜெனிவா மனிதவுரிமை பேரவையிலே இலங்கையில் இடம்பெற்ற தமிழின படுகொலையை மூடி மறைத்து தமிழர்களுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற நாடகத்தை அரங்கேற்றி அதற்கு துணை போன எவரும் இதில் கலந்துகொள்ளக்கூடாது எனவும் அவர் உறுதியாக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 21ஆம் திகதி தமிழ் நாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு திருமுருகன் காந்தி உட்பட மே 17அமைப்பை சார்ந்தவர்களும் பொதுமக்களும் தீர்மானித்திருந்தனர். இதற்கு தமிழக அரசு தடை விதித்திருந்த நிலையில் அதனையும் மீறி நினைவேந்தலை நடத்தியமையாலேயே திருமுருகன் காந்தி உட்பட தமிழர் விடியல் கட்சியின் தலைவர், செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டமையை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது வன்மையாகக் கண்டிக்கின்றது. திருமுருகன் காந்தி ஜெனிவா மனிதவுரிமை பேரவையிலேயே இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது தமிழின அழிப்பே என்று ஆணித்தரமாக கூறியவர். அதற்கு தனது தாய் நாடு துணை போனது என்பதையும் இந்தியாவில் இருந்து கொண்டே கூறிவருபவர். இவ்வாறான ஒருவர் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை நடத்த முற்பட்ட போது அதனை தமிழக அரசு தடுத்துள்ளது. ஆனால் அவ்வாறு தடை செய்யப்பட்டும் அதனையும் மீறி அவர் நினைவேந்தலை நடத்தியமையை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை தற்போது தமிழகத்தில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் கட்சி ஆட்சி செய்துகொண்டிருக்கும் நிலையில் அக் கட்சியை சார்ந்தவர்கள் தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு தடை விதித்,தமையானது ஜெயலலிதா முன்னர் எப்படியிருந்தாரோ அதே நிலைமைக்கு அக் கட்சி செல்வதாகவே நாம் பார்க்கின்றோம் என்பதுடன் இதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

இந்நிலையில் திருமுருகன் காந்தி உட்பட ஏனையவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பாரிய கண்டன கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில். ஜெனிவா மனிதவுரிமை பேரவையிலே இடம்பெற்றது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிக்கப்படக்கூடிய விடயம் என்பதையும் அங்கே தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட ஏமாற்று நாடகத்தின் உண்மையை அம்பலப்படுத்திய அனைத்துத் தரப்பினரும் இதில் கலந்துகொள்ள வேண்டும். அதேசமயம் ஜெனிவா மனிதவுரிமை பேரவையில் தமிழர்களுக்கு எதிரான அவர்களை ஏமாற்றுகின்ற நாடகத்திற்கு ஆதரவளித்து அதனை அரகேற்றிய எவரும் பங்கு பற்றக் கூடாது.

மேலும் இக் கவனயீர்ப்புப் போராட்டத்தை யாழ்.இந்திய தூதரகத்திற்கு முன்பு அல்லது யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பு நடத்துவதற்கு ஆலோசித்து வருவதாகவும் இது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-4)

## ஈச்சமோட்டை குளக்கரை வீதி பயணிக்க முடியாத நிலையில்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை குளக்கரை வீதி பத்து வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வெள்ளநீர் பாயும் வடிகால்களும் சேதமடைந்திருப்பதனால் வாகனங்கள் வீதிக்குள் செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. இதனால் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதி அபிவிருத்தி குறித்து மக்கள் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை வீதி திருத்தப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இவ் வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-105)

## வற்றிய குளங்களில் சேரும் குப்பைகள்


(ஈச்சமோட்டை)

வடக்கில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் வெப்பத்தையடுத்து யாழ்.குடாநாட்டில் உள்ள குளங்கள் நீர் வற்றி வறண்டு காணப்படுகின்றன.

பாசையூர் ஈச்சமோட்டைப் பகுதிகளில் காணப்படும் இவ்வாறான நீர் வற்றிய குளங்களில் வீசப்படும் பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன்கள், ஏனைய கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருவதாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் குளங்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் நோய்த் தாக்கம் குறித்து அச்சமடைவதாகவும் தெரிவித்தனர். எனவே உரிய அதிகாரிகள் குளங்களை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுள்ளனர். (இ-5-105)

## மின்சாரத் தூண் சேதம்



தென்மராட்சி மந்துவில் வடக்கு மணலைகிராயில் திடல் வைரவர் ஆலயத்திற்கு முன்பாக மின்சாரத் தூண் உடைக்கப்பட்டும் மின்சார வயர்கள் அறுக்கப்பட்டும் காணப்படுகின்றன. மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்படும் இவ்விடத்தில் விசமிகளின் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. (இ-5-101)



யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் புதிய சாரணர்களுக்கு சின்னஞ் சூட்டும் விழா அண்மையில் பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சாரணர் சங்க (பயிற்சி) உதவி மாவட்ட சாரண ஆணையாளர் இ.தவகோபால், இப்பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் செல்வி க.கமநலநாயகி, இங்கிலாந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர் க.சுகந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உலக சுற்றாடல் தினமும் சுற்றுச் சூழல் வாரமும்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் (வது) உலக சுற்றாடல் தினமும் தேசிய சுற்றுச்சூழல் வாரமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



World Class UK Degree @ICBT Jaffna Campus

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

# ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

## BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC Recognized

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes | TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA, 580, Hospital Rd., Jaffna, Tel: (+94)214 777 888, Fax: (+94)654 777 890, Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited

# HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent Qualification

Duration
- 2 Years

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

## BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC Recognized

Accredited by: ice Institution of Civil Engineers

Entry Qualifications
- Higher National Diploma in Civil Engineering or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA, 580, Hospital Rd., Jaffna, Tel: (+94)214 777 888, Fax: (+94)654 777 890, Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector



World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

# ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

RICS Accredited

## BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications

Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC Recognized

Week End Part Time Classes

» Duration: 1 Year

Progression Route to RICS: BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA, 580, Hospital Rd., Jaffna, Tel: (+94)214 777 888, Fax: (+94)654 777 890, Email : jaffna@icbtcampus.edu.lk



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited

Duration 2 Years

TVEC REGISTERED

# ICBT DUAL HNDs Software Engineering + Computing

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Cardiff Metropolitan University

UGC Recognized

## BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

(சி-8701)

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA, 580, Hospital Rd., Jaffna, Tel: (+94)214 777 888, Fax: (+94)654 777 890, Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரத்து 617 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிப்பு

## உதவிட விரும்புவோர் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்க!

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில், நாட்டில் நடைபெற்று முடிந்த இறுதிக்கட்ட யுத்த சூழ்நிலைகளின் போதனா மக்கள் இடம் பெயர்வின் பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின் போது 41 ஆயிரத்து 465 குடும்பங்கள் இங்குள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். இக் குடும்பங்களில் 5 ஆயிரத்து 617 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதார ரீதியாக தொழில் முயற்சிகள் இன்றி வாழ்ந்து வருவதாக பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட புள்ளி விபரத் தகவல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலைகளால் குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் ஆயிரத்து 617 குடும்பங்களும், விபத்துக்கள் காரணமாக குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் 106 குடும்பங்களும் தற்கொலை மரணங்களால் குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் 63 குடும்பங்களுமாக மொத்தம் ஆயிரத்து 786 குடும்பங்களும் மற்றும் ஏனைய வழிகளால் குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில், 3 ஆயிரத்து 831 குடும்பங்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 617 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக் குடும்பங்கள் மாவட்டத்தின் கீழ் உள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் முறையே, துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 498 குடும்பங்களும்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 852 குடும்பங்களும்,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 919 குடும்பங்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 432 குடும்பங்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 577 குடும்பங்களும், வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவில் 334 குடும்பங்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 612 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதார ரீதியாக தொழில் முயற்சிகள் இன்றியும் வாழ்ந்து வருவதாக பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் நல்லின ஆடுகள், நல்லின மாடுகள் உட்பட சுய தொழில் முயற்சிகளை வழங்கி உத்வ விரும்புவோர் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்று பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமே நேரடியாக உதவித் திட்டங்களை கையளிக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களும் கேட்டுள்ளனர். (2-15)




# நிரந்தர வைப்பிலிருந்து பணத்தை மீளப்பெற வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் அனுமதி

( பரந்தன் )

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தல்கள் அடைப்பு பணிக்கான வரிப் பணத்தை செலுத்துவதற்காக சங்கத்தின் பெயரில் மக்கள் வங்கியில் நிரந்தரவைப்பில் உள்ள சில கணக்கிலக்கங்களில் இருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களுக்கான சேமிப்புப் பணம் மக்கள் வங்கியின் நிரந்தர வைப்பிலுள்ளது. அதற்கு எதிராக 10 மில்லியன் ரூபா கடன் பெறுவதற்கு கிளிநொச்சி மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளரிடம் எழுத்து மூலம் கோரியிருந்தனர்.

ஆனால் அவர் அந்தக் கடன் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை என மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் மற்றும் பொது முகாமையாளர் எஸ்.துரைசிங்கம் ஆகியோர் மாகாண கூட்டுறவு ஆணையாளரை நேரில் சென்று சந்தித்து தமது பிரச்சினைகளை அவரிடம் கூறியதைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆணையாளர் கிளிநொச்சிகூட்டுறவு உதவிஆணையாளருக்கு சங்கத்தினுடைய உற்பத்திகளுக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது என ஆலோசனை வழங்கியதை அடுத்து நேற்று முன்தினம் முதல் நிரந்தர வைப்பிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு கிளிநொச்சி மவட்ட உதவி ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து நிரந்தர வைப்பின் சில கணக்குகளில் இருந்து 35 இலட்சம் ரூபா மீள எடுக்கப்பட்டு மது வரித்திணைக்களத்திற்கு நேற்று முன்தினம் வரி செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று எதிர்வரும் 15 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்தும் வரிப்பணம் செலுத்துவதற்கான அனுமதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312 )

# வவு.வடக்கு பிரதேச சபை கட்டடம், கலாசார மண்டபம் திறந்து வைப்பு





(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக கட்டடமும் கலாசார மண்டபமும் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நெடுங்கேணியில் இடம் பெற்றது.

நீண்டகாலமாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக கட்டடம் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்திருந்த நிலையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு அமைக்கப்பட்ட இக் கட்டடத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா திறந்து வைத்திருந்தார். வவுனியா வடக்கு பிரதேசத்தின் நீண்ட கால தேவையாக காணப்பட்ட கலாசார மண்டபத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் திறந்து வைத்திருந்தார்

பிரதேச சபையின் செயலாளர் க. சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ஆர்.இந்திரராசா, எம்.தியாகராசா, செ.மயூரன்உட்பட பலரும்கலந்து கொண்டிருந்தனர். (2-15-250)

# ஆட்டோ உரிமையாளர் சங்க நிர்வாகக் குழுக்கூட்டம்

## மன்னாரில் நடைபெற்றது

(மன்னார்)

மன்னார் நகர ஆட்டோ உரிமையாளர் சங்கமானது நீண்டகாலமாக இயங்காத நிலையில் காணப்பட்டதால் அதனை மீள இயங்க வைக்கும் நோக்கோடு கடந்த 15 ஆம் திகதி வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தலைமையில் பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.



அதற்கமைவாக கடந்த 31 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் மன்னாரில் உள்ள வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் உப அலுவலகத்தில் முதலாவது நிர்வாகக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தவகையில் 13 ஆட்டோ தரிப்பிடங்களையும் சார்ந்த சகல அங்கத்தவர்களும் மாதாந்த சந்தாக் கட்டணமாக ரூபாய் 100/- கட்டவேண்டும்.

தரிப்பிடங்களில் ஏற்கனவே பதிவில் உள்ள உரிமையாளர் ள் தமது அங்கத்துவ சந்தாவை, பற்றுச் சீட்டுக்களை நிர்வாகத்தினருக்கு ஒப்படைத்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்த ஆவணங்கள் அற்ற ஏலவே பதிவு செய்து தற்போது சேவையில் உள்ளவர்கள் தமது அங்கத்துவ சந்தாவாக ரூபாய் 2,500/- செலுத்தி தமது அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ளவேண்டும். இனி வரும் காலங்களில் தரிப்பிடங்களில் அங்கத்துவம் பெறவேண்டுமாயின் தரிப்பிடங்களைப்பொறுத்து அவர்களது அங்கத்துவ சந்தா தீர்மானிக்கப்படுமெனவும் முடிவெடுக்கப்பட்டது.

அத்தோடு பேருந்து நிலைய தரிப்பிடம் மற்றும் வைத்திய சாலை தரிப்பிடம் ஆகிய இரு தரிப்பிடங்களிலும் காலை 6 மணிமுதல் இரவு 8 மணி வரை நேர அட்டவணை போடப்பட்டு அதனடிப்படையில் குறித்த தரிப்பிடங்களை சேர்ந்த ஆட்டோக்கள் சேவையில் ஈடுபடவேண்டும்.

இரவு 8 மணிமுதல் பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் இருந்து விரும்புகின்ற ஆட்டோ உரிமையாளர்கள் தலைவருடன் கலந்துரையாடி ஒரு நேர அட்டவணையை தயார் செய்து அதனடிப்படையில் செயற்படமுடியும் என்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (2)

# இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகத்தால் உதவி

( மன்னார் )

வெள்ள அனர்த்தங்களில் பாதிக் கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில் மன்னார் மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் நேற்றுக் காலை காலி மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட பலரும் தமது உடமைகளை இழந்து, தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய 5 பிரதேசச் செயலகங்களினூடாக கிராமங்களில் நிவாரண பொருட்கள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (2)

# வாசகர்சாலை கட்டடம் திறப்பு

முல்லைத்தீவு சிலாவத்தை சனசமூக நிலையத்தின் வாசகர்சாலை கட்டடம் கடந்த 29 ஆம் திகதி முற்பகல் 10மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

வாசகர்சாலையின் பெயர்ப்பலகையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சி.குணபாலன் திறந்து வைக்க கட்டடத்தின் இரண்டு அறைகளையும் முறையே கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் சி.சபேசன், சிலாவத்தை தமிழ் வித்தியாலய அதிபர் செ.யோகேசுவரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

விருந்தினர் அனைவரும் வாசகர்சாலையின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு தமது உரைகளை ஆற்றினார்கள். நிகழ்வில் சனசமூக நிலைய பணியாளர்கள், கிராம அலுவலர் மற்றும் கிராம அமைப்புக்களின் சார்பாளர்கள் எனப் பலரும் சிறப்பித்தனர். (2)

# பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

வவுனியா மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிர் வாக சபை கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடை பெறும்.

எனவே அனைத்து பழைய மாணவர் உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பிள்ளைகளின் தந்தை வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்பு

## செட்டிகுளத்தில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை வெட்டுக் காயங்களுடன் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்னக் குளத்தில் வசித்த முத்துலிங்கம் கனகராஜா (வயது-40) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே செட்டிகுளம் சண்முகபுரம் கிராமத்தில் வீதியோரத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.



நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு வவுனியா நகர்ப்பகுதிக்கு சென்று வருவதாகக் கூறி பேருந்தில் ஏறிப் பயணித்த இவர் இரவு சுமார் 9 மணியளவில் தனது மனைவிக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து தனது கடையின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது முச்சக்கரவண்டியை எடுத்து விடும்படியும் தான் வீட்டுக்கு வந்துகொண்டிருப்பதாகவும் கூறி விட்டு அழைப்பைத் துண்டித்துள்ளார்.

நீண்டநேரமாகியும்தனது கணவன் வீட்டுக்கு வராத காரணத்தினால் இரவு 10 மணியளவில் தொலைபேசியில் அழைப்பை மனைவி மேற்கொண்ட போது தொலைபேசி இயங்கவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை செட்டிகுளம் - பூவரசங்குளம் வீதியில் உள்ள சண்முகபுரம் கிராமத்திற்கு சென்றவர்கள் வீதியோரத்தில் சடலம் கிடப்பதைக் கண்டு செட்டிகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# வடிகான்களின் வேலைகள் மந்தகதி; வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்பு



வவுனியா புகையிரத நிலைய வீதியின் இரு மருங்கிலும் வெட்டப்பட்ட. வடிகான்களின் வேலைகள் மந்த கதியில் நடைபெறுவதால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக அப் பகுதி வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா நகரத்திற்கும் குருமன்காட்டிற்கும் இடையிலான புகையிரத நிலைய வீதி பல வருடங்களுக்கு பின்னர் கடந்த வருடத்தில் இருந்து திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருத்த வேலைகளின் போது வீதியின் இரு மருங்கிலும் வெட்டப்பட்ட வடிகான்கள் பூரணப்படுத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. ஒரு வாரத்திற்குள் வெட்டப்படும் வடிகான்கள் மூடப்பட்டு பாவனைக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் சில இடங்களில் இரண்டு மாதங்களுக்கு மேலாக வெட்டப்பட்ட வடிகான்கள், வேலைகள் முடிவுறுத்தப்படாது காணப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வீதியோரத்தில் அமைந்துள்ள தமது வர்த்தக நிலையங்களுக்கு தமது வாடிக்கையாளர்கள் பொருட்களை கொள்வனவு செய்ய வருவதற்கு முடியவில்லை எனவும், இதுவரை வேலைகள் முடிவுறுத்தப்படாத வடிகான்களால் 5 வரையான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் பலமுறை தெரியப்படுத்தியும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# 17.4 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மூன்று வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மத்திய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 17.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பகுதிகளில் மூன்று வேலைத் திட்டங்களை முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 17.4 மில்லியன் ரூபா நிதி உதவியுடன்.

அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள அக்கராயன் குளம் பகுதியில் மழை நீர் வடிகால் அமைப்பு வேலைகளுக்காக 4 மில்லியன் ரூபாவும்,

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 8 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் கைவிடப்பட்ட தரிசு நிலக் காடுகள் புனரமைப்பு செய்வதற்கு 8 மில்லியன் ரூபாவும்,

இதேபோன்று 8 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் வரட்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நீர் துரவுகள் அமைக்க 5.4 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 17.4 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வட்டுவாகல் முகத்துவாரத்தில் இலட்சக்கணக்கில் கரையொதுங்கும் இறந்த நிலையில் மீனினங்கள்



வட்டுவாகல் முகத்துவாரப் பகுதியில் இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குகின்றன.

இதுபோல் நேற்று முன்தினம், நேற்று ஆகிய இரு தினங்களிலும் வட்டுவாகல் கடல் நீரேரி பெருங்கடலை சேருகின்ற முகத்துவாரப் பகுதியில் பல இலட்சக் கணக்கான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அப் பகுதியில் கரையொதுங்கி வரும் மீன்களை வட்டுவாகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கிடங்குகள் வெட்டி அதனுள் அகற்றி வருகின்றனர்.

இதேபோன்று கடந்த 2015 ஆம் ஆண்டும் பல இலட்சக்கணக்கில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)




# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

தென் பகுதியில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு , புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் கடந்த மாதம் 31ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (2)

# மஹாகும்பாபிஷேகம்

(பூநகரி)

பூநகரி மட்டுவில் நாடு வில்லடி ஆலங்குளம் சித்தி விநாயகர்கோவில்மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.38 முதல் 12.47 வரையிலான சுப வேளையில் நடைபெறும்.

எண்ணெய்க் காப்பு சாத்துதல் இன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை நடைபெறும்.

தொடர்ந்து 12 தினங்கள் விசேட அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (2-84)

# கண்ணாடிச் சுவரை உடைத்து வலி நிவாரண மருந்துகள் திருட்டு

## மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சம்பவம்

(மல்லாவி)

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் மருந்துப் பொருட்கள் விநியோகம் செய்யும் அறையின் கண்ணாடிச் சுவரை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த வலி நிவாரண மருந்து வகைக்ள் உட்பட பல பெறுமதியான மருந்துப் பொருட்களைக் களவாடிச் சென்றுள்ள சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு நேரத்தில் இந்தத் துணிகரத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

திருட்டுப் போன விடயம் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை வைத்திய சாலை கடமைக்குச் சென்றிருந்த பணியாளர்கள் அவதானித்து விட்டு வைத்திய அதிகாரிக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, வைத்திய அதிகாரியினால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. இந் நிலையில், நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் வரை பொலிஸாரினால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மல்லாவி பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-15)

# தென்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கி உதவி

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக தென் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வவுனியா வர்த்தகர் சங்கம் கடந்த இரண்டு தினங்களாக வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உதவிப் பொருட்களை நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் கையளித்தனர்.

இதில் வர்த்தகர் சங்கத் தலைவர், பொருளாளர், செயலாளர் மற்றும் மத்திய



உறுப்பினர்கள் கலந்து கொண்டு வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகளிடம் உணவுப் பொருட்களைக் கையளித்தனர்.

இதேவேளை வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்து விசேட குழுவினர் வவுனியா மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லவுள்ளதாக மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த பகுதிகளின் ஒருங்கிணைப்பாளர்களாக அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரியால் நியமனம்




அனர்த்தத்திற்கு உட்படாத பிரதேசங்களைச் சேர்ந்த அமைச்சர்களை அனர்த்தத்திற்குள்ளான தொகுதிகளின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளுக்காக அமைப்பாளராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளதுடன். அவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அனர்த்தத்திற்குள்ளான தொகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களின் சகல ஒருங்கிணைப்பு தொடர்பாகவும் கண்டறிதல் இந்த புதிய அமைப்பாளர்களின் கடமையாகும்.

அதற்கேற்ப நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் பெயர்ப் பட்டியல் பின்வரு மாறு.

களுத்துறை மாவட்டம் புளத்சிங்கள தொகுதி-நிமால் சிறிபாலடி சில்வா. அகலவத்தை தொகுதி-எஸ்.பி.திசாநாயக்க.பண்டாரகம.தொகுதி-பாட்டலி சம்பிக்க ரணவக்க. மத்துகம தொகுதி-லக்ஷ்மன் கிரியெல்ல.ஹொரண தொகுதி-சரத் அமுனுகம. களுத்துறை தொகுதி-ரவூப் ஹக்கீம்.அர்ஜுன ரணதுங்க. மாத்தறை மாவட்டம் அக்குரஸ்ஸ தொகுதி-அநுர பிரியதர்ஷன யாப்பா.தெனியாய தொகுதி-அகிலவிராஜ் காரியவசம்,மாத்தறை தொகுதி - ரவி கருணாநாயக்க. வெலிகம தொகுதி-ரஞ்சித்சியம் பலாபிட்டிய.ஹக்மன தொகுதி -விஜித் விஜயமுனி சொய்சா, காலி மாவட்டம் ஹினிதும தொகுதி-துமிந்த திஸாநாயக்க.பத்தேகம தொகுதி-பி. ஹரிசன்.பெந்தர-எல்பிட்டிய தொகுதி-விஜயதாஸ ராஜபக்ஷ. இரத்தினபுரி மாவட்டம் கலவான தொகுதி-சுசில் பிரேமஜயந்த. இரத்தினபுரி தொகுதி -றிசாத் பதியுதீன். எஹலியகொட தொகுதி-எஸ்.பி. நாவின்ன. பெல்மடுல்ல தொகுதி - காமினி ஜயவிக்ரம பெரேரா. நிவித்திகல தொகுதி-நவீன் திசா நாயக்க. அம்பாந்தோட்டை மாவட்டம்-பைசர் முஸ்தபா-ஹரின் பெர்னாண்டோ. கேகாலை மாவட்டம் - தயா கமகே. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. (இ-7)

# சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு பாதயாத்திரை இன்று ஆரம்பம்

(கரணவாய்)

தொண்டைமானாறு செல் வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.காரைதீவு நந்தவனம் ஸ்ரீ சித்திவிநாயகர்கோவில் பரிபாலகர் வேலுசாமி மகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும் இப்பாதயாத்திரை புத்தூர், மீசாலை, கொடிகாமம், பரந்தன், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வழியாக செல்லவுள்ளது. 52 நாட்கள் நடைபெறும் இந் நடைப்பயணம் 572 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாகும். (இ-60)

# ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு



(கொழும்பு)

பாதிக்கப்பட்ட தமது சகோதர மக்களுக்காக ஏனைய மாவட்டங்களிலுள்ள மக்கள் தமது பொறுப்பை நிறைவேற்றியதற்காக ஜனாதிபதி தனது நன்றியை தெரிவித்தார்.

காலி மாவட்ட மக்களுக்காக ஏனைய மாவட்டங்களிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை உத்தியோகபூர்வமாக காலி மாவட்ட செயலாளரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கையளித்தார். இது தொடர்பான நிகழ்வு காலியில் இடம் பெற்றது.

காலி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திறகுப் பின்னர் . அனர்த்த நிவாரண சேவை அலுவலர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி , பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அவர்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்பை பாராட்டினார். பாதிக்கப்பட்ட தமது சகோதர மக்களுக்காக பொலநறுவை, அநுராதபுரம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார், மொனராகலை, குருநாகல், புத்தளம், மாத்தளை, கண்டி, கேகாலை, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள்தமது பொறுப்பை நிறைவேற்றியதற்காக ஜனாதிபதி தனது நன்றியை தெரிவிப்பதாக குறிப்பிட்டார். (இ-7)

# 20 வருடங்களாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்துள்ளது

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய காலத்திலிருந்தே பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்த கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம், கடந்த 20 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள். இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில். நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மாவனெல்ல அரநாயக்க மண்சரிவு, கொலன்னாவை மீதொட்ட முல்ல குப்பை மலை சரிவு உள்ளிட்ட அனர்த்தங்கள் மற்றும் தற்போது இடம் பெற்றுள்ள இயற்கை அனர்த்தம் என. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து. இப்படியான அவலங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

இவ்வாறு பாதிப்புகள் இடம் பெற இருக்கும் பகுதிகளை அடையாளப்படுத்தி. மக்களை இடம்பெயர்ந்து செல்லுமாறு 10. 20 வருடங்களாக அரசாங்கங்கள் எச்சரிக்கை விடுத்துக் கொண்டு தான் உள்ளன.

இருப்பினும் அவ்விடங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து செல்லாமல் இருக்கின்றனர். அதனால் தான் அதிகளவானோர் உயிர் இழக்கின்றனர்" என்றார். (இ-7)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அடையாள அட்டைகளை பெற விசேட திட்டம்

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களின் காணாமல் போன அடையாள அட்டைகளை. மீளப் பெற்றுக் கொடுக்க விசேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுவதாக ஆட்பதிவுத் திணைக்களம் கூறியுள்ளது.

அடையாள அட்டை காணாமற்போனமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளரின் ஆலோசனைப்படி புதிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆட்பதிவுத் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு முதலிடம் வழங்க உள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# தண்ணீர் கிடைக்காததால் சகாரா பாலைவனத்தில் 44 பேர் தாகத்தால் பலி!

(நைஜர்)

தண்ணீர் கிடைக்காததால் சகாரா பாலைவனத்தில் நடக்க முடியாமல் தாகத்தில் தவித்த 44 பேர் மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழுந்தனர். பலியானவர்களில் ஏராளமானோர் குழந்தைகள்.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து வெளியேறி ஐரோப்பிய நாடுகளில் பலர் தஞ்சம் அடைந்து வருகின்றனர். மத்திய தரைக் கடலில் பயணம் செய்வதற்கு முன் பாக இவர்கள் சகாரா பாலைவனத்தை கடந்து லிபியா வருகிறார்கள்.

அங்கு படகுகளை வாடகைக்கு பிடித்து ஐரோப்பிய நாடுகளை சென்றடைகின்றனர். படகுப்பயணத்தின் போது கடலில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.

அதற்கு முன்னதாகவே சிலர் சகாரா பாலை வனத்தை கடக்கும்போதே குடிக்க தண் ணீர் கிடைக்காமல் தாகத்தால் உயிரை விடுகின்றனர். இச்சம்பவம் அண்மையில் நடந்துள்ளது.

அகதிகள் சிலர் ஒரு லொறி மூலம் சகாரா பாலைவனத்தை கடந்து கொண்டிருந்தனர். அப்போது நடு வழியில் லொறி பழுதடைந்து நின்றுவிட்டது. அதைத்தொடர்ந்து லொறியில் வந்தவர்கள் நடைபயணம் மேற்கொண்டனர்.

அப்போது குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே நடக்க முடியாமல் தாகத்தில் தவித்த 44 பேர் மயங்கி விழுந்து பரிதாபமாக இறந்தனர்.

இந்தத் தகவலை நடந்து வந்து உயிர் பிழைத்த 6 பெண்கள் தெரிவித்தனர். இவர்கள் நைஜர் நாட்டில் திர்கு பகுதியில் உள்ள கிராமத்துக்கு வந்தடைந்தனர்.

பலியானவர்களில் ஏராளமானோர் குழந்தைகள் என்றும் தெரிவித்துள்ளனர். பொதுவாக கானா மற்றும் நைஜீரியாவை சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் சகாரா பாலைவனத்தை கடந்து லிபியாவுக்கு சென்று அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இராணுவத்தில் சேவையாற்றும் நபருக்கு எந்த வகையிலும் அரசியல் அறிவு இல்லை

# மேர்வின் சில்வா கூறுகிறார்



இராணுவத்தில் சேவையாற்றும் நபருக்கு எந்த வகையிலும் அரசியல் அறிவு இல்லை எனவும் இதனால். மக்களின் மன உணர்வு குறித்து புரிந்துணர்வு இல்லை எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை நீங்க வேண்டி களனி உப்பளவன்ன விஷ்ணு ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

களனி பிரதேசத்தில் தான் செய்த சேவைகளை அறிந்து கொள்ள வேண்டுமாயின் ஐந்து அறிவு ஜீவன்களுக்கு உண்ணமோப்ப உணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுப்பதாகவும். சில விலங்குகளுக்கு இருக்கும் இயலுமை மரநாய்களுக்கு இருப்பதில்லை எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு தற்போது வெட்கம் மற்றும் அச்சம் என்பன இல்லாமல் போயுள்ளதால், நாட்டில் அனர்த்தமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது மகிந்த ராஜபக்ஷ அந்த நிலைமையைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்தார்.

எது எப்படி இருந்த போதிலும். ஏற்பட்ட அனர்த்த நிலைமையில் அரசாங்கம் இதனை விட அக்கறை மற்றும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நரம்பு கட்டமைப்பில் தளர்ச்சி ஏற்பட்டுள்ள அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்த வேண்டும் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 120

# சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் ஆதலினால்...

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மனிதனின் அத்தியாவசிய தேவைகளுள் முக்கியமானது உணவும் நீரும் உறையுளும் மட்டுமே. உணவின்றி எந்த உயிரினத்திலும் அசைவேது. உணவின்றிபட்டினியால் இறக்கும் மக்கள் கூட்டத்தை இவ்வுலகில் நாம் அறியக்கிடைத்தாலும் அந்த பட்டினிக்கு.தீனிபோடும் பொறுப்பு ஒவ்வொருவரையும் சார்ந்தது. உழவுத்தொழிலுக்கு உரமிடாதுவிட்டால் எதுவிருந்தும் இறுதியில் உண்பதற்கு என எதுவுமிருக்காது. இங்கே உரமிடுதல் என்பது வெளிநாட்டு அசேதன இரசாயனப் பொருட்களை திணிப்பதல்ல. மாறாக உழவுத் தொழிலை சமகால விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் உள்வாங்கி உற்பத்தி அமைந்திருக்கின்றது.

ஆதலினால் வடமாகாணத்தின் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இந்தச் சுட்டியின் அதிகரிப்பை நோக்கிய அபிவிருத்தி அமையவேண்டும். தரமான உற்பத்தி மற்றும் மதிப்பேற்றஞ்செய்த பொருட்கள் உலகச்சந்தையை எட்டிப்பார்ப்பதற்கான உலகத் தரத்தை கொண்டிருக்கவேண்டும். தொடர்ந்தும் உள்ளூர்ச் சந்தையை நம்பி எமது அபிவிருத்தியை குறிப்பாக உற்பத்தியை நாம் நகர்த்தக் கூடாது. மாறாக வடபகுதிப் பொருட்களுக்கு நல்லதொரு சந்தைவாய்ப்பை தென்பகுதியும் தரமுடியாது. ஆதலினால் உலகச் சந்தைக்கான தரத்துடன் கூடிய சிறந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும், பொதி செய்யும் வழிவகைகளை நாம் ஆழ்ந்து சிந்தித்தால் இத்தேசம் மந்தநிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு இன்னொரு காரணமாக காலநிலை மாற்றத்தை நாம் முன்வைத்தாலும் இவையனைத்தையும் இருக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பத்தின் உதவியுடன் மாற்றியமைக்க முடியும் என பிறதேசங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் கட்டியங் கூறி நிற்கின்றன. வரண்ட பாலை வனங்களை பசுமையாக்க முடியுமானால் எமது பிரதேசத்தை ஏன் நாம் மாற்றிக்காட்டமுடியாது. இதற்கான ஊக்குவிப்பு எதிர்பார்த்தளவில் இல்லையென நாம் எடுத்த மாத்திரத்தில் எவரையும் குறைகூற முடியாது. அனைவரதும் பங்களிப்பு அவசியமாகின்றது என்றதனை நாம் இன்னும் கவனத்திற் கொள்ள வில்லை.

எமது அண்டை நாடான இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பல தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வளரும் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. இந்தவகையில் அங்கே உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு உருவாக்கப்பட்டு உற்பத்திப் பொருட்கள் அதன் தேவைக்காக உற்பத்தியாவதாலும் ஏற்றுமதி செய்யப்படுவதனாலும் அங்கே தொழிற்றுறையின் விருத்தியென்பது இமாலய சாதனையாக பதியப்பட்டிருக்கின்றது. இதற்காக தமிழ்நாட்டிலுள்ள தொழிற்றுறைகளில் எமது இளைய சமூகத்தை பயிற்றுவித்தால் குறிப்பாக அங்கு நடைபெறுகின்ற தொழில் விருத்தி பற்றி நேரில் கண்டும் கேட்டும் அனுபவப்படவும் வாய்ப்புக் கிட்டினால் சுயமாக பலவகைத் தொழிற்றுறைகளை இங்கே செய்வதற்கு தேவையான உந்துதல் கிடைக்கும்.

தேசம் மெல்லமெல்ல வளர்ச்சி காணும் நிலைக்குள் வந்திருக்கும் இந்நேரத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து அதற்கான வளர்ச்சிப் பாதைக்கும் எமது இளைய சமூகத்தை இட்டுச் செல்வதற்கான வழிவகைகளை திட்டமிட்ச் செயலாற்ற வேண்டும்.

வடமாகாணத்தின் மொத்த

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 136

அதனை அடுத்த பரிணாமத்திற்கு எடுத்துச் செல்லல் என்பதாகும். உழவுத்தொழிலில் அக்கறை காட்டுகின்ற இளையவர் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது என பலதரப்பட்ட தரவுகள் எடுத்துக் கூறுவதிலிருந்து அதற்கான முக்கியத்துவம் நலிவடைந்து வருகின்றது என்பதுதானே பொருள். இதனை அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு திட்டமிடும் வல்லுநர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வெறுமனே கட்டடங்களும் எமக்கொவ்வாத தொழில்நுட்பமும் எந்தவிதத்திலும் எமக்கு அபிவிருத்தியைத் தந்துவிடாது.

வடமாகாணத்து அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு கணிசமானளவுக்கு குறைவாகவே காணப்படுகின்றது. எமது மொத்த உள்நாட்டு (வடமாகாண) உற்பத்தி GDP (Gross Domestic Product) என்பது 3-4 சதவீதமாக இருக்கும் அதேநேரத்தில் தென்பகுதியிலுள்ள மற்றைய மாகாணங்களின் GDP மிகவும் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இதற்கான காரணத்தை நாம் கண்டறிந்து கொண்டால் எமது பகுதியிலிருந்து உற்பத்தியாகிப் பொருட்கள் உலக சந்தைக்கு செல்லாததே காரணமாகும். எமது மாகாணத்தின் உற்பத்தி ஒருபுறமிருக்க அதனை தரமாக அதுவும் உலகத்தரம் வாய்ந்த அந்நிய செலாவணியை பெறக் கூடியதாக உருவாக்கி உலகச்சந்தைக்கு எடுத்துச் சென்றாலன்றி இதனை நாம் உயர்த்திக் கொள்ள முடியாது. சுருக்கிச் கூறினால் ஒரு தேசத்தின் சிறப்புத் தன்மையை அல்லது ஆரோக்கியத்தைக் கட்டியங்கூறும் சுட்டியாகவே மொத்த உள்ளூர்



விடிவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். வாய்ப்புக்களை பலவகைகளிலும் உருவாக்கிக் கொடுத்தாலன்றி இப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களும் அரிதாகவே காணப்படுகின்றன. சுயதொழில் முயற்சித்திட்டங்கள் இன்னும் பலமாக உருவாக்கப்பட வேண்டும். அதிலொன்றாகவே சுற்றுலாத்துறையை இனங்காண்கின்றனர். ஆனாலும் இவையனைத்தும் இருந்தாலும் இளையவர்கள் விவசாயத் தொழிலில் காட்டும் அக்கறை மகிழ்ச்சி தருவதாக இல்லை. இது விவசாய நாடான எமக்கும் விவசாயத்தில் ஒருகாலம் கொடி கட்டிப் பறந்த எமது மாகாணத்திற்கும் ஒருநல்ல செய்தியாக இல்லை. வசதிகள் அதிகமாக இல்லாத காலங்களில் சிறப்பாக செய்யப்பட்ட விவசாயம் தற்போது வகையான இலகுதொழில்நுட்பங்கள் தினமும் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கான ஒன்றிணைந்த மையங்கள் அமைக்கப்பட்டு அங்கே விவசாய உற்பத்திகள், மதிப்பேற்றஞ்செய்த பொருட்கள், சிறந்த பண்ணை முறைகள், தனியார் தொழில் மையங்கள் என்பன சிறப்பாகவும் இத்தொழில்களை செய்வதற்கான ஆலோசனை மையங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி மையங்கள் என பலவும் அமைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதனை நாம் கண்கூடாக காண முடிகின்றது. குறிப்பாக பலதரப்பட்ட வீட்டு உபகரணங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதனை நாம் இன்னுமேன் கவனிக்கவில்லை. பல வகையான ஆய்வுகூட உபகரணங்கள் மலிவான முறையில் இலகு

புதிய தொழிற்றுறைகளுக்கான நிதியை வங்கிகள் மூலமாகவும் ஏனைய நிதி நிறுவனங்கள் மூலமாகவும் கடனாகவாவது கிடைக்க வழிசெய்தால் இத்தகைய மாற்றங்களை ஓரளவுக்கேனும் ஏற்படுத்தலாம். குறிப்பாக நிதியை கடனாகப் பெற்று அதனை அடைக்க முடியாத போது அவற்றை வட்டியுடன் திருப்பிச் செலுத்த வழி வகைகளையும் கண்டறியவேண்டும்.

இதேபோன்றதொரு வளர்ச்சி எமது தேசத்திலும் வேண்டும்! அதனை சாத்தியப்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் புலமையாளர்களும் கல்வி நிறுவனங்களும் குறிப்பாக ஆய்வு செய்யும் நிறுவனங்களும் அத்துடன் ஊடகங்களும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். போரின் கிடுக்குப்பிடிக்குள் சிக்கியிருந்த

உள்ளூர் உற்பத்தியின் பெறுபேறு சிறப்புறும் போது மற்றைய மாகாணங்களும் ஒன்றிணைந்தால் எமது நாடு முன்னேறும். மக்கள் அனைவரும் பயனடைவர். சரி இந்தப் பூனைக்கு மணி கட்டுபவர் யார் என்னும் இடர்பாட்டிலேயே நாம் சிக்கி சிதைந்து கொண்டிருக்கின்றோமே தவிர ஆக்கபூர்வமான செயலில் இறங்குவது எப்போது?


விவசாயச்செய்கையை முழுமையாக கைவிட்டு எந்த அபிவிருத்தியையுமே நாம் மகிழ்ச்சியாக அடைந்திட முடியாது.

அதனால் விவசாயச் செய்கைக்கான முக்கியத்துவத்தில் எந்தவித விழுக்காடும் இல்லாதவாறு பார்த்துக்கொள்வதுடன் விவசாயச் செய்கையின் பரிமாணத்தை ஏனைய தொழிற்றுறையின் விருத்தியுடன் இணைத்துக் கொண்டால் பலவிதமான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிடலாம்.

சுகமாக இருந்து சீவிக்க முடியாது என பெரியவர் சொன்ன கருத்துக்கள் பொன் மொழிகளாகவே இன்றும் இருக்கின்றன. பலவகைகளிலும் வழியைத் தேடுபவர், வளரத்துடிப்பவர்களை தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் இந்த வளர்ச்சிப் பாதை தேச ஆரோக்கியத் திற்கு வழி கோலுவதாக அமைய வேண்டும். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்பதிலிருந்து உழவுத்தொழிலுக்கு அதாவது விவசாய உற்பத்திக்கு எந்தவித பங்குமில்லாது தொழிற்றுறையை விருத்தி செய்ய வேண்டும். விவசாயத்தொழிலின் முன்னேற்றமின்றேல் அது எமக்கான குழியை நாமே தேடிக்கொண்டதாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதனின் உடலில் செயற்படும் 2 இதயங்கள்



(கோவை)

ஒரு மனிதனின் உடலில் இரண்டு இதயங்களை செயற்பட வைப்பதற்கான அறுவைச் சிகிச்சையை கோவை வைத்தியர்கள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். இதற்கான அறுவைச் சிகிச்சை 3.30 மணி நேரம் நடைபெற்றுள்ளது.

கேரள மாநிலத்தை சேர்ந்த 45 வயது நபர் ஒருவருக்கு இருதய கோளாறு ஏற்பட்டது. அவரை கோவையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அவருடைய இதயம் மிக மோசமான நிலையில் செயற்பட்டு வந்தது. எனவே, வேறு இதயம் பொருத்தினால் தான் அவரால் உயிர் பிழைக்க முடியும் என்ற நிலை இருந்தது.

இந்த நிலையில் அந்த வைத்தியசாலையில் மூளை சாவு அடைந்த பெண் ஒருவரின் இதயத்தை தானம் பெற்று அதை அவருக்கு பொருத்த முடிவு செய்தனர்.

ஆனால், அவரது உடலில் இருந்த இதயம் 10 சதவீதம் அளவுக்கு இயங்கி வந்தது. எனவே அந்த இதயத்தை அகற்றாமலேயே புதிய இதயத்தை அதன் பக்கத்தில் பொருத்தி வேலையை இரு இதயத்துக்கும் பகிர்ந்து அளிப்பது என்று வைத்தியர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி புதிய இதயம் மார்பின் வலது பக்கத்தில் பொருத்தப்பட்டு ஏற்கனவே இருந்த இதயத்தோடு இணைப்பு கொடுக்கப்பட்டது.

இந்த அறுவைச் சிகிச்சை மூன்றரை மணி நேரம் தொடர்ந்து நடந்தது. அது வெற்றிகரமாக அமைந்தது. தற்போது அவரது உடலில் 2 இதயங்கள் உள்ளன. அவை இரண்டுமே செயற்பட்டு வருகின்றன. ஒரு இதயம் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் இரு இதயமும் சேர்ந்து செய்கின்றன. எனவே உடலில் 2 இடங்களில் இதய துடிப்பு கேட்ட வண்ணம் உள்ளது.

இது, மிக நவீன அறுவைச் சிகிச்சை ஆகும். இந்தியாவில் இப்போது தான் முதன்முறையாக இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்துள்ளனர்.

வைத்தியர் பிரசாந் விஜயன் தலைமையிலான வைத்தியர்கள் இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தனர். (இ-3)

# சசிகலாவை கட்சியிலிருந்து நீக்கும் வரை தர்மயுத்தம் தொடரும் - ஓ.பி.எஸ் அறிவிப்பு



(நாகப்பட்டினம்)

சசிகலாவை கட்சியில் இருந்து நீக்கும் வரை தர்மயுத்தம் தொடரும் என அ.தி.மு.க. (புரட்சித்தலைவி அம்மா) அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

நாகை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அவுரித்திடலில் நாகை மாவட்ட அ.தி.மு.க. (புரட்சி தலைவி அம்மா) அணி செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

தற்போது தமிழகத்தில் நடைபெறும் ஆட்சி சசிகலாவின் பினாமி ஆட்சி. அ.தி.மு.க. தொண்டர்கள் 100: 100 சதவீதம் நம்முடைய பக்கம் தான் உள்ளனர். ஆனால் 122 எம்.எல்.ஏக்களை வைத்துக்கொண்டு ஆமை வேகத்தில் ஆட்சியை நகர்த்தி விடலாம் என்று தப்புக்கணக்கு போட்டுக்கொண்டு அந்த நம்பிக்கையில் உள்ளனர்.

ஒரு குடும்பத்தின் ஆதிக்கத்தில் இந்த கட்சி சென்று விடக்கூடாது என்று எண்ணி எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றவர்கள் குடும்பத்தின் ஆதிக்கத்துக்குள் கட்சியை கொண்டு செல்லவில்லை. அதைத்தான் நாம் கூறுகிறோம். ஆனால் நமது அடிப்படை கோரிக்கையை நிறைவேற்றாமல் இணைவோம் என்று ஒரு பொய்யை மெய்யாக கூறுகிறார்கள். தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல.

மக்கள் தான் எஜமானர்கள். நல்ல தீர்ப்பை அவர்கள் வழங்குவார்கள். இந்த கூட்டத்திற்கு எத்தனையோ தடையை விதித்தார்கள். அதையும் மீறி பெண்கள் திரண்டு வந்துள்ளனர். ஜெயலலிதா 74 நாட்கள் அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மரணம் அடைந்தார். அவரது மரணத்தில் உள்ள மர்மம் குறித்து சி.பி.ஐ. மூலம் உரிய நீதி விசாரணை நடத்தி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம்.

ஆனால் அதை இந்த பினாமி அரசு செய்ய முன்வரவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் இது மக்கள் புரட்சியாக வெடிக்கும். உங்கள் ஆட்சி வீட்டுக்கு போகும். ஜெயலலிதா மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியதால் தான் தமிழர்களின் நெஞ்சில் இன்றும் தெய்வமாக வாழ்கிறார்.

ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்ம முடிச்சை அவிழ்க்க வேண்டும். அதற்கு உரிய நீதி விசாரணை நடத்த வேண்டும். குடும்பத்தின் பிடியில் இருந்து கட்சியை விடுவிக்க வேண்டும். அதுவரை எங்கள் தர்ம யுத்தம் தொடரும். நமது அடிப்படை கோரிக்கை சசிகலாவை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்பது தான். ஆனால் அவர்கள் அதை விடுத்துவிட்டு இணைவோம் என்று தவறான தகவலை விதைக்கிறார்கள்.

தேர்தல் ஆணையம் விரைவில் நல்ல தீர்ப்பை வழங்கும். அ.தி.மு.க. தலைமைக்கழகம், இரட்டை இலை சின்னம் நம்மிடம் வந்து சேரும். உண்மையான அ.தி.மு.க. நாம் தான் என்று தேர்தல் ஆணையம் தீர்ப்பு வழங்கும். அதன் பின்னர் பொதுச்செயலாளர் தேர்தல் நடைபெறும்.

ஜெயலலிதாவின் திட்டங்களை முடக்கியதோடு, எதையும் செயற்படுத்த முடியாத அரசாக இந்த அரசு உள்ளது. மக்களின் எந்த பிரச்சினையையும் அரசு கவனிக்கவில்லை. விரைவில் தேர்தல் வரும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பு. தேர்தல் வந்தால் தான் ஜெயலலிதா ஆட்சி மீண்டும் அமையும். அது நடைபெறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

தி.மு.க. ஆட்சியை பிடிக்கும் என்று மு.க.ஸ்டாலின் கனவு கண்டு கொண்டிருக்கிறார். தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது தமிழக மக்களின் எதிர்பார்ப்பை, உரிமையை நிறைவேற்றவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினை, முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் நீதிமன்றம் மூலம் நமது உரிமையை மீட்டெடுத்தவர் ஜெயலலிதா.

இலங்கையில் போர் நடந்தபோது தமிழக கத்தில் ஆட்சியில் இருந்த கருணாநிதி, மத்திய அரசிலும் அங்கம் வகித்தார்.

ஆனால் போர்நிறுத்தத்துக்காக எந்த நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை. மு.க.ஸ்டாலின் காண்பது பகல் கனவு. அதை அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணி முறியடிக்கும். சசிகலாவை பொதுச்செயலாளராகவோ, முதலமைச்சராகவோ ஆக்க வேண்டும் என்று ஜெயலலிதா ஒருபோதும் கூறியது இல்லை. மக்கள் ஆதரவோடு, பெண்கள் ஆதரவோடு தர்ம யுத்தம் வெல்லும். ஜெயலலிதா ஆட்சி அமையும். அதை தமிழக மக்கள் நடத்திக் காட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பாரதச் செய்தி

# சசிகலா மறுசீராய்வு மனு 5 ஆம் திகதி விசாரணைக்கு



(பெங்களூர்)

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து சசிகலா தரப்பில் உச்ச நீதிமன்றில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.


இந்த மனு எதிர்வரும் 5 ஆம் திகதி (திங்கட்கிழமை) விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் இரண்டு அல்லது மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு இந்த மனு மீது விசாரணை நடக்கும்.

ஆரம்ப நிலையிலேயே மனு விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்யப்பட்டால் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். (இ-3)

# கூடங்குளத்தில் 5,6ஆவது அணு உலைகள்

## இந்தியா-ரஷ்யா இடையே ஒப்பந்தம்



(டில்லி)

கூடங்குளத்தில் 5, 6-வது அணு உலைகளை கட்டுவதற்கான பணிகளை துரிதப்படுத்துவதற்காக இந்தியா - ரஷ்யா இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் - இந்தியப் பிரதமர் மோடி இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதில் கூடங்குளம் 5, 6-வது அணு உலைகள் கட்டுவதற்கான பணிகளை துரிதப்படுத்துவது குறித்த ஒப்பந்தமும் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பிரித்வி - II ஏவுகணையை ஒடிசாவிலிருந்து நேற்று வெற்றிகரமாக பரிசோதித்தது இந்தியா

(புவனேஸ்வர்)

ஒடிசா மாநில கடலோர நகரமான பலசோரில் உள்ள சாந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து பிரித்வி-II ஏவுகணை நேற்றுக் காலை விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

நாட்டின் பாதுகாப்புக்காக பிரித்வி ரக ஏவுகணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பிரித்வி-II வகை ஏவுகணை சுமார் 350 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் சக்தி கொண்டது.

பிரித்வி-II ரக ஏவுகணைகள் இராணுவ பயன்பாட்டுக்காக ஏற்கனவே சேர்க்கப்பட்டு விட்டது.

என்றாலும் அது அடிக்கடி நவீனமாக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஒடிசா மாநில கடலோர நகரமான பலசோரில் உள்ள சாந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து பிரித்வி-II ஏவுகணை நேற்றுக் காலை 9.50 மணியளவில் விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகம் பிரித்வி-II ஏவுகணையில் தற்போது சில மாற்றங்களை செய்துள்ளது.

அதன்படி பிரித்வி-II ஏவுகணைகளில் 500 முதல் 1000 கிலோ எடை கொண்ட வெடி பொருட்களை வைத்து பயன்படுத்த முடியும். (இ-3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸ் பருவ நிலை மாற்ற ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகல்

## ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

**(வோஷிங்டன்)**

**பாரிஸ் பருவ நிலை மாற்றம் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதனை அந் நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.**



காற்றில் காபனீரொட்சைட் கழிவுகள் அதிகமாக கலப்பதால் பருவ நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் பனி ஆறுகள் உருகி கடல் நீர் மட்டம் உயர்ந்து பல தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது. அளவுக்கு அதிகமாக மழையும், வரட்சியும் ஏற்படுகிறது. காபனீரொட்சைட் கழிவுகளை அதிகம் வெளியேற்றும் நாடு கள் பட்டியலில் அமெரிக்கா முதலிலுள்ளது.

எனவே சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பாரிஸில் ஒன்று கூடி பருவ நிலை மாற்றம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர். கடந்த 2005ஆம் ஆண்டு அமெரிக்கா உள்ளிட்ட 17 நாடுகள் அதில் கையெழுத்திட்டுள்ளன.

அதில் காபனீரொட்சைட் அளவாக வெளியிடுவது உள்ளிட்ட பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நிலையில் பாரிஸ் பருவ நிலை மாற்றம் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதனை அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இதன் மூலம் அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பு பறிபோவதாகவும், இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு சாதகமாக இருப்பதாகவும் குற்றம் சாட்டினர்.

ட்ரம்பின் இந்த முடிவுக்கு சர்வதேச நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-3)




# பொலிஸாக ரோபோ



(டுபாய்)

டுபாயில் பொலிஸ் பணியில் ஈடுபட்டுள்ள ரோபோ வீதிகளில் ரோந்து செல்கிறது. தற்போது சோதனை முறையில் ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

'ரோபோ' எனப்படும் இயந்திர மனிதனின் செயற்பாடு அனைத்து துறைகளிலும் பரவிவருகிறது. முன்பு மருத்துவம் மற்றும் ஹோட்டல் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டது.

தற்போது பொலிஸ் பணியிலும் 'ரோபோ' ஈடுபட்டுள்ளது. உலகில் முதன் முறையாக டுபாயில் ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபட்டுள்ளது.

அந்த ரோபோ டுபாய் பொலிஸ் சீருடை அணிந்துள்ளது. அது பொலிஸ் அதிகாரிகளுடன் கைகுலுக்குகிறது. இராணுவ வீரர்கள் போன்று கம்பீரமாக சல்யூட் அடிக்கிறது. வீதிகளில் பொலிஸார் போன்று ரோந்து பணியும் செல்கிறது. தற்போது சோதனை முறையில் ரோபோ பொலிஸ் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகளில் திருப்தி அடைந்தால் பொலிஸ் பணியில் 25 சதவீதம் ரோபோக்கள் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

அந்த ரோபோக்கள் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் எதுவும் இன்றி எதிர்வரும் 2030ஆம்ஆண்டில்பயன்படுத்தப்படும் என பொலிஸ் உயரதிகாரி ஜெனரல் பிரிகேடியர் காலித் நாசர் அல் ரஷ்கி தெரிவித்தார்.

இத்தகைய ரோபோக்கள் நாள் முழுவதும் பணிபுரியும். அது விடுமுறை எடுக்காது. உடல் நலக் குறைவு காரணமாகவோ, பிரசவ கால விடுமுறையோ கேட்காது. 24 மணி நேரமும் வேலை பார்க்கும், என்று அவர் கூறினார். (இ-3)

# பாகிஸ்தானுடன் இறுக்கமான இராணுவ உறவு கிடையாது

## ரஷ்ய ஜனாதிபதி புடின் பேட்டி



(செயின்ட் பீட்டர்ஸ்பர்க்)

இந்திய பிரதமர் மோடி ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பாகிஸ்தானுடன் ரஷ்யா இறுக்கமான இராணுவ உறவு கொண்டிருக்கவில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மோடி 6 நாட்கள் சுற்றுப் பயணமாக ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய 4 நாடுகளுக்கு பய ணம் மேற்கொண்டுள்ளார். இதில் ஜேர்மனி, ஸ்பெயின் பயணத்தை முடித்த பிரதமர் மோடி, நேற்று முன்தினம் ரஷ்யா சென்றார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை பிரதமர் மோடி சந்தித்தார். இரு தலைவர்களும் முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பிடிஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில்,

பாகிஸ்தான் உடன் இறுக்கமான இராணுவ உறவை ரஷ்யா கொண்டிருக்கவில்லை. இந்தியா - ரஷ்யா இடையிலான நெருங்கிய நட்புறவு என்பது 'நம்பிக்கை அடிப்படையிலானது. பாகிஸ்தான் உடனான நட்புறவு வளர்வதால் இந்தியாவுடனான உறவை நீர்த்து போக செய்ய முடியாது. ஏவுகணைகள் போன்ற நுட்பமான பகுதிகளில் உலகில் மற்ற நாடுகளுடன் இல் லாத வகையில் இந்தியா வுடன் ரஷ்யா ஒரு ஆழமான ஒத்துழைப்பை கொண்டுள்ளது. இந்தியாவுடனான ஒத்துழைப்பு இலாபகரமானது.

இந்திய பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை திணிக்கிறதா என்பதை மதிப்பிட வேண்டியது உங்களை பொறுத்தது என்று கூறிவிட்டார். ஆனால் எங்கிருந்து எச்சரிக்கை வருகிறது என்பது ஒரு விடயம் கிடையாது. இது ஏற்றுக்கொள்ள முடியாதது. பயங்கரவாதத்திற்கு எதிராக போரிட இந்தியாவிற்கு எங்களுடைய ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும்.

இந்தியாவுடன் ரஷ்யா தனிச்சிறப்பான உறவை கொண்டுள்ளது. அதன்பொருள், பிறநாடுகளுடன்எங்களுடைய தொடர்பிற்கு இந்தியா தடையை ஏற்ப டுத்தும் என்பது கிடையாது. இதுபோன்ற கருத்து கேலிக் கூத்தாகும்.

நாங்கள் பாகிஸ்தான் உடன் இறுக்கமான இராணுவ உறவுகளை கொண்டிருக்கவில்லை. பாகிஸ்தான் உடனான எங்கள் உறவானது இந்தியா - ரஷ்யா இடையிலான வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என புடின் மேலும் தெரிவித்தார். (இ-3)

# எஸ். 400 ரக ஏவுகணைகளை தயார் செய்து இந்தியாவிற்கு வழங்க ரஷ்யா அனுமதி



(செயின்ட் பீட்டர்ஸ்பர்க்)

இந்தியப் பிரதமர் மோடியின் ரஷ்ய பயணத்தை முன்னிட்டு, எஸ்-400 ரக ஏவுகணைகளை இந்தியாவிற்கு வழங்குவது குறித்து ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதில் 400 கி.மீ. தொலைவுக்குள் இருக்கும் எதிரியின் ஏவுகணை மற்றும் வான் வழி இலக்குகளை துல்லியமாக கண்டறிந்து தாக்கி அழிக்கும் எஸ்-400 ரக ஏவுகணைகளை இந்தியாவிற்காக வழங்குவது தொடர்பாக இந்தியா - ரஷ்யா பிரதிநிதிகள் இடையே நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது.



அதன் முடிவில், எஸ்-400 ஏவுகணைகளை இந்தியாவிற்கு அளிப்பதற்கான தயாரிப்பு ஏற்பாடுகள் தொடங்கி நடைபெற்று வருவதாக ரஷ்ய துணை பிரதமர் டிமிட்ரி ரோகோகோசின் தெரிவித்துள்ளார்.

தயார் செய்யப்படும் ஏவுகணைகள் இந்தியாவிற்கு எப்போது அனுப்பி வைக்கப்படும் என்பது குறித்த அதிகார பூர்வ தகவல் இல்லை. அதனை கணக்கிட முடியவில்லை என்றும் ரோகோகோசின் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கோவாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின் போது இருநாடுகளுக்கு இடையே 18 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதில் ஏவுகணை தயாரிப்பு ஒப்பந்தமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அதன்படி மூன்று வகையான ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் பாதுகாப்பு ஏவுகணையை தயாரிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஒரே நேரத்தில் வேறு வேறு 36 எல்லைகளை குறிவைத்து தாக்கும் வல்லமை கொண்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலாபனையால் தமிழ் இலக்கிய உலகிற்கு மரியாதை செய்த

# கவிக்கோ அப்துல் ரகுமான் சென்னையில் காலமானார்

கவிஞரும் தமிழ்ப் பேராசிரியருமான அப்துல் ரகுமான் உடல் நலக்குறைவால் சென்னையில் காலமானார். 80 வயதான கவிக்கோ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் அப்துல் ரகுமான் சென்னை பனையூரில் உள்ள அவரது வீட்டில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மூச்சுத் திணறலால் உயிரிழந்தார்.

1937 ஆம் ஆண்டு நவம்பர் 9 இல் மதுரை மாவட்டத்தில் பிறந்த அப்துல் ரகுமான் தனது தொடக்கக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் பயின்றார். பின்னர் மதுரை தியாகராசர் கல் லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேறினார். தொடர்ந்து அக் கல் லூரியிலேயே பயின்று இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றார்.



### தமிழ்த்துறை தலைவர்

சென்னை தரமணியில் அமைந் துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அதன் இயக்குநராகப் பணியாற்றிய ச.வே.சுப்பிரமணியத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதுக்கவிதையில் குறியீடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென் னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

20 ஆண்டுகள் தமிழ்த் துறை யின் தலைவராகப் பணியாற்றினார். கவிதைகள், கட்டுரைகள் தமிழ்நாடு வகுப்பு வாரிய தலை வராக 2009 மே முதல் 2011 வரை பணியாற்றி வந்தார்.

மேலும் இவர் தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலை மாமணி விருது உள்ளிட்ட 14 விருதுகளை பல்வேறு அமைப்புகளால் வென்றிருக்கிறார்.

ஹைக்கூ, கஜல் உள்ளிட்ட பிறமொழி இலக்கியங்களை தமிழில் புனைந்திருக்கிறார்.

கவிக்கோ அப்துல் ரகுமான் தமது பால்வீதி கவிதை தொகுப்பில் தொடங்கி பித்தன் வரை பல்வேறு நூல்களை தமிழ் இலக்கிய உலகிற்கு கொடுத்துள்ளார்.

இவரது தந்தை உருதுக் கவிஞர். இவரது தாத்தா உருது, பாரசீக மொழிகளில் கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர். அதனால், இயல்பிலேயே இவரும் கவிதை எழுதும் திறன் கொண்டிருந்தார்.

தமிழில் உயர்கல்வி பயின்ற போது ஆங்கில இலக்கியம் மீதும் நேசம் பிறந்தது. கீட்ஸ், ஷெல்லி உள்ளிட்ட கவிஞர்களின் கவிதையில் மனம் கவரப்பட்டார்.

கல்லூரியில் நடக்கும் அனைத்து கவிதைப் போட்டிகளிலும் இவருக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும். முதுகலைக் கல்வி பயிலும் போது, மவுலானா ஜலாலுத்தீன் ரூமி, இக்பால், தாகூர், கலீல் ஜிப்ரான் ஆகியோரது கவிதைகளைப் படித்தார்.

அவர்களைப் போலவே எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவ்வாறே எழுதவும் தொடங்கினார்.

தமிழ், ஆங்கிலம், அரபி, உருது, பாரசீகம், இந்தி ஆகிய பல மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். சமஸ்கிருதமும் கற்றார். எந்தத் துறையில் இறங்கினாலும் அதன் வேர் வரை சென்று ஆழக் கற்பது இவரது இயல்பு.

### ஆறாவது விரல்

தமக்கு உயிரும்வாழ்க்கையுமே கவிதைதான் என்று சொன்னவர் அப்துல் ரகுமான். எழுது கோலைத் தம் கையின் ஆறாவது விரலாகவே உணர்கிறார். 'இந்த ஆறாவது விரல் வழியே வடியும் இரத்தமும் சதையும் தாம் தம் எழுத்துகள்' என்று சொன்னவர்.

என் ஆறாவது விரல் வழியே
சிலுவையிலிருந்து
வடிகிறது இரத்தம்
ஆம்
என் 'மாமிசம்'
வார்த்தை ஆகிறது

என்றவர்.

சுவையான பால்வீதி- 1974 இல் இவரது முதல் கவிதை தொகுப்பான 'பால் வீதி' வெளிவந்தது. பாலைச் சுண்டக் காய்ச்சித் திரட்டாகக் கட்டி ஆக்கியது போன்று, சிந்தனையையும் கற்பனையையும் திரட்டி வடித்த புதுக்கவிதைகள் கொண்டது பால்வீதி.

நேயர் விருப்பம் - அடுத்து வெளிவந்தது, கவியரங்கங்களில் அவர் பல ஆண்டுகளாகப் படைத்த கவிதைகளுள் தெரிந்தெடுத்த சிலவற்றையும், இந்தி, உருது இசைப் பாடல் வடிவங்களைத் தமிழில் அறிமுகப் படுத்திப் படைத்த பாடல்களையும் கொண்ட நேயர் விருப்பம். இது 1978ஆம் ஆண்டில் வெளிவந்தது.

### புதுக்கவிதைத் தொகுதிகள்

அதைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு சுட்டுவிரல் என்ற நூல் வெளியானது. இந்த நூலில் சமுதாயச் சீரழிவுகளுக்குக் காரணமானவர்கள் அனைவரையும் குற்றம் சாட்டுகிறார். சினம் கொண்டு சாடியுள்ளார்.

### ஆலாபனை

1995 ஆம் ஆண்டு ஆலாபனை வெளியானது. 1998 இல் விதைபோல் விழுந்தவன் நூலும், 1998 இல் முத்தமிழின் முகவரி, பித்தன் ஆகிய புதுக்கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

### தமிழ் இலக்கியத்திற்கு மரியாதை

இவரது 'ஆலாபனை' கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகடமி விருது வழங்கப்பட்டது. இதன்மூலம், வெகுகாலமாக தமிழ்க் கவிதைக்கு வழங்கப்படாமல் இருந்த இந்த விருதை தமிழுக்குப் பெற்றுத் தந்தார்.

### காதல் இலக்கியம்

2002 ஆம் ஆண்டு மின்மினிகளால் ஒரு கடிதம் என்னும் நூல் வெளிவந்துள்ளது. இது அரபி, உருது மொழிகளின் கஜல் என் னும் காதல் கவிதை வடிவத்தைத் தமிழில் அறிமுகம் செய்ய இவர் படைத்த அழகிய காதல் இலக்கியம். ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கிய வகைகளை தமிழில் பரவச் செய்தார்.

சூஃபி பாடல்களின் தத்துவ தரிசனம் இவர் பாடல்களில் பிரதிபலிக்கும். இலக்கிய கட்டுரைகள் இக்கவிதை நூல்கள் மட்டுமின்றி இரு ஆராய்ச்சி நூல்கள், பத்துக்கும் மேற்பட்ட இலக்கியக் கட்டுரை நூல்கள், பிறமொழிக் கவிதை களை மொழி பெயர்த்து விளக்கி எழுதிய பல கட்டுரைத் தொகுதிகள் என்று பல நூல்களைப் படைத்து வெளியிட்டுள்ளார்.

தத்துவ கவிதைகள் 'திராவிட நாடு', 'திராவிடன்', 'முரசொலி', 'தென்றல்', 'இனமுழக்கம்', 'மன்றம்', 'விகடன்' உள்ளிட்ட பல இதழ்களில் இவரது தொடர் கட்டுரைகள், சிறுகதைகள் வெளிவந்தன.

இலக்கியத்தின் பல களங்களில் முத்திரை பதித்தாலும், ஒரு கவிஞராகவே இவர் புகழ்பெற்றார். இவரது தத்துவக் கவிதைகள் நல்ல வரவேற்பைப் பெற்றன.

பல்வேறு விருதுகளுக்கும் படைப்புகளுக்கும் சொந்தக்காரரான கவிக்கோ அப்துல் ரஹ்மான் கடைசி வரை சினிமாவுக்கு பாடல்களை எழுதமாட்டேன் என தீர்க்கமாய் இருந்தவர் ஆவார்.

சினிமாவுக்கு பாட்டில்லை பல்வேறு படைப்புகளுக்கு சொந்தக்கா ரரான கவிக்கோ அப்துல் ரஹ்மான் சினிமாவுக்கு பாடல்களை எழுத மாட்டேன் என்பதில் உறுதியாக இருந்தார்.

குறிப்பாக கவிக்கோ சினிமாவில் இடம் பெறும் குத்துப் பாட்டுகளை விரும்பியதில்லை. சினிமா குத்துப் பாடல்கள் குறித்து நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கவிக்கோ பத்துப்பாட்டு என்றால் பதறுகிறோம்.

குத்துப்பாட்டு என்றால் குதூகலமாய் ஆடுகிறோம் என்றார்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் குறித்தும் கவிதை எழுதி ஈழத் தமிழர்களின் வாழ்வியலோடும் இரண்டறக் கலந்து விட்டார் கவிக்கோ.

## இரத்தம் வெவ்வேறு நிறம்

அங்கே
பிணங்கள் விழுந்துகொண்டிருக்கின்றன
நாம்
'எத்தனை விக்கெட்டுகள் விழுந்தன? என்று
விசாரித்துக்கொண்டிருக்கின்றோம்.
அங்கே
குண்டுகள் வெடித்துக்கொண்டிருக்கின்றன
நாம்
பட்டாசு வெடித்துப்
பரவசப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.
அவர்கள்
வேட்டையாடப்பட்டுக்
கதறிக்கொண்டிருக்கின்றார்கள்
நாம்
வெள்ளித் திரைகளுக்கு முன்
விசிலடித்துக்கொண்டிருக்கின்றோம்.
அவர்கள்
கற்பழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்
நாம்
'கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?" என்று
பட்டிமண்டபம் நடத்திக்கொண்டிருக்கின்றோம்.
அவர்கள்
வெளிச்சத்தின் விளைச்சலுக்கு
இரத்தம் சொரிந்துகொண்டிருக்கின்றார்கள்
நாம்
இருட்டுக்காடுகளுக்கு
வேர்வை வார்த்துக்கொண்டிருக்கின்றோம்
அவர்கள்
சயனைட் அருந்திக்கொண்டிருக்கின்றார்கள்
நாம்
அதர பானம் பருகிக்கொண்டிருக்கின்றோம்
இதில் வியப்பேதும் இல்லை.
அவர்கள் கவரிமான்கள்
நாம் கவரிகள்.
இதோ
தேவவேடம் போட்ட சாத்தான்கள்
வேதம் ஓதுகின்றனர்.
இதோ
இரத்தப் பற்களை மறைத்த ஓநாய்கள்
நீரைக் கலக்கிய பழியை
ஆடுகளின்மீது சுமத்திக்கொண்டிருக்கின்றன.
இதோ
சித்தாந்த வித்துவான்கள்
ஒப்பாரியில்
இராகப் பிழை கண்டுபிடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.
இதோ
வெள்ளைக்கொடி வியாபாரிகள்
விதவைகளின் புடைவைகளை
உருவிக்கொண்டிருக்கிறார்கள்.
அன்று
அசோகன் அனுப்பிய
போதிமரக் கன்று
ஆயுதங்கள் பூக்கின்றது.
இன்று
அசோகச் சக்கரத்தின்
குருட்டு ஓட்டத்தில்
கன்றுகளின் இரத்தம்
பெருகிக்கொண்டிருக்கின்றது.
தாய்ப் பசுவோ
கவர்ச்சியான சுவரொட்டிகளைத் தின்று
அசைபோட்டுக்கொண்டிருக்கின்றது!

- அப்துல் ரகுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிலையைப் பிரகடனப்படுத்த பல்வேறு நாடுகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை ஜனாதிபதியால் நிராகரிப்பு

## இராஜாங்க அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யுமாறு பல்வேறு நாடுகளும் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்து விட்டார் என்று நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மேலதிக உதவிகளை வழங்குவதற்கு, அவசரகால நிலையை பிரகடனம் செய்யுமாறு பல நாடுகள் கேட்டுக் கொண்டதாகவும், அதனை ஜனாதிபதி நிராகரித்து விட்டதாகவும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவசர கால நிலையைப் பிரகடனம் செய்தால் அது நாட்டின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்றே ஜனாதிபதி அந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

அதைவிட, அவசரகால நிலையைப் பிரகடனம் செய்திருந்தால் அதனை கூட்டு எதிரணியினர் தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்க இராணுவப் பயிற்சி அதிகாரிகள் இலங்கையில்



(கொழும்பு)

அமெரிக்க இராணுவப் பயிற்சி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க இராணுவ ஒதுக்குப்படை அதிகாரிகள் பயிற்சிப் படையணியைச் சேர்ந்த 33 அதிகாரிகள் இரண்டு வாரகாலப் பயணமாக இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் போது, தியத்தலாவ பயிற்சி முகாமில், எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி வரை உள்ள ஆயுதங்களைக் கையாள்வது, களமுனை நடைமுறைகள், உடற்பயிற்சி, உள்ளிட்ட பயிற்சிகளை இலங்கை இராணுவம் வழங்கவுள்ளது.

அமெரிக்க இராணுவ பயிற்சி அதிகாரிகள், இலங்கை இராணுவ அக்கடமி, மேற்குப் பிராந்திய இராணுவத் தலைமையகம், பொறியியல் படைப்பிரிவின் தலைமையகம், இலகு காலாற் படை தலைமையகம், மின்னேரியாவில் உள்ள ஆட்டிலறி பாடசாலை உள்ளிட்டவற்றுக்கும் சென்று பார்வையிடவுள்ளனர். (இ-7)

# சீன கடற்படை உயர் அதிகாரிகள் கடற்படைத்தளபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

சீன கடற்படையின் உயர் மட்ட அதிகாரிகள் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.



சீனக் கடற்படையின் கிழக்கு பிராந்திய தலைமையக பிரதித் தளபதி, றியர் அட்மிரல் சென் ஹோ தலைமையில், கொழும்பு வந்துள்ள சாங் சுன், ஜிங் சோ, சாவோ ஹூ ஆகிய சீன கடற்படைக் கப்பல்களின் கட்டளை அதிகாரிகளே, இலங்கை கடற்படைத் தளபதியைச் சந்தித்தனர்.

இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சீனத் தூதரக, பாதுகாப்பு [illegible] சூ [illegible] இந்தச் சந்திப்பில் பங்கேற்றார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### கடமைகளும் கிழமைகளும்

எதென்னவோ விடுமுறை நாள் என்றால் பலபேருக்கு அசாத்திய சோம்மல் வந்து விடுகிறது. ஒன்றையும் உருப்படியாகச் செய்யாமல் தூங்கி வருகிறார்கள். தலைமாட்டில் இருக்கும் பொருளைக் கால்மாட்டில் எடுத்து வைக்கக்கூடச் சோம்மல் படுகிறார்கள்.

"மனுசனுக்கு ஒரு நாள் ஓய்வு வேணாமா? என்னய்யா வாழ்க்கை பின்னே?'' என்று சப்பைக்கட்டு வாதங்களையும் இவர்கள் பக்கபலமாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

வெளிநாட்டவர்கள் கூட வீக் எண்ட சிஸ்டம் என்று சொல்கிறார்கள். அதாவது சனியும் ஞாயிறும் அடியோடு தொழிலிருந்து ஓய்வு. மற்ற நாட்களில் கடுமையான உழைப்பு. ஓய்வு எடுப்பது என்பது சோம்பல் தனமல்ல. அது சக்தியற்ற உடம்பு எனும் பற்றரியைச் சார்ஜ் செய்து கொள்வது போன்றதுதான். இதில் தவறே இல்லை. ஆனால் சனி, ஞாயிறு அல்லது அவரவர்களுக்கு உரிய விடுமுறை நாட்களில் நான் ஒன்றுமே செய்யமாட்டேன் என்று பழியாய்க் கிடப்பது தவறு.

கனம்கனமாய் ஆசைகளை இதயத்தில் சுமந்து கொண்டு ஏங்குகிறோம். நம்மில் பலர் அடிப்படைத் தேவைகளுக்கான போராட்டத்திலேயே இன்னமும் ஜெயித்தபாடில்லை. அப்படி இருக்கும் போது மாதா மாதம் ஏகமாய் மிச்சம் பிடித்துக்கொண்டு அடுத்த தலைமுறைக்குச் சேர்த்து வைக்க வேண்டும். என்கிற எண்ணமே இல்லாத வெளிநாட்டவர்களை நம்முடன் ஒப்பிட்டுக்கொண்டு இடிச்சபுளி மாதிரி உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

மேலும் வெளிநாட்டவர்கள் அந்த ஐந்து நாட்களும் கடுமையாகவும் வெளிவேசம் இல்லாமலும் உழைக்கிறார்கள். நம்மில் எத்தனை பேர் உழைக்கின்ற நாட்களில் உண்மையாக உழைக்கிறோம்? இதற்கு அவரவர் மனச்சாட்சியைத் தொட்டுப் பதில் சொல்லட்டும்.

கடுமையாக உழைத்து எந்த நேரமும் பாடுபட்டு உடம்பைக் கெடுத்து கொள்பவர்களின் கட்சியைத் சேர்ந்தவனல்லன் நான்.

உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாத உழைப்பபைத்தான் நாம் நல்க வேண்டும். இதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அலட்சியத்தையும் சோம்பலையும் மெத்தனத்தையும் மெத்தையாக்கி அதில் படுத்துக் கொண்டு வாய்ப்பு எனும் ரயில்களைக் கோட்டைவிட்டு விடுகிற நபர்களின் செயல்களை என்னால் ஜீரணம் செய்ய முடியவில்லை.

உழைப்பிலே சுகம் காண முயற்சி வேண்டும். கடனே என்று செய்யாமல் மனம் லயித்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உழைப்பு நேரம் தவிர்ந்த பிற நேரங்களிலும் உற்சாகமாக இருக்க முடியும்.

24 மணி நேரமும் வேலை; 365 நாட்களும் வேலை என்று பாடுபடும் பல இராணுவ வீரர்களையும்; பல டாக்கர்களையும்; பொலிஸ் துறையைச் சேர்ந்த பலரையும் நாம் எண்ணிப் பார்த்து, அவர்களின் மனநிலையில் ஒரு 50 சதவிகிதமாவது வளர்த்துக் கொள்ளவேண்டும்.

கடமைகளுக்குக் கிழமைகள் ஒருபோதும் தடையாக இருக்க முடியாது. கடமைகள் காத்திருக்கும் போது கடிகாரத்தையும் கலண்டர்களையும் நாம் புறக்கணிக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் நாம் பல்லக்குகளில் அமர முடியாது. மாறாக நாமே அதைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் காலமெல்லாம் ஏற்படும்.

**லேனா தமிழ்வாணன்**



நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் சமுர்த்திப்பிரிவினது சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு செயற்பாடுகள் பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் தலைமையில் கடந்த 31ஆம் திகதி ஆரம்பமானது. இதில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் சிகரெட் விற்பனையை நிறுத்திய கடை உரிமையாளர்களான, இ.யோசேப்,பி.சிந்தாகுலஜெயம், இ.அன்ரனிமதுரநாயகம், லோ.அருள்தாஸ், யோ.அல்வீனஸ் ஆகிய ஐந்து பேரும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மாதிரி சிகரெட்டுகள் பிரதேச செயலர் சி.ஜெயகாந்தால் எரிக்கப்பட்டன. பின்னர் சமுர்த்திக் கொடி விற்பனையின் பொருட்டு முதலாவது கொடியினை சமுர்த்தி தலைமை முகாமையாளர் ம.கியூமனுக்கு அணிவித்து நிகழ்வு அரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் சி.ஜெயகாந்த், கணக்காளர் நிர்மல், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சர்வேந்திரன், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் சிறிதரன், பிரதேச சபை செயலாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பினுடைய நிர்வாக உறுப்பினர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கு பற்றினர்.

# போதைப்பொருள் அடிமைகளை

# பெண்கள் திருமணம் செய்யக்கூடாது

## சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் அறிவுரை

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை பெண்கள் திருமணம் செய்துகொள்ளாதீர்கள் என தெரிவித்த யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.கௌதமன். அவ்வாறானவர்களை திருமணம் செய்தால் மிக விரைவில் பெண்களுடைய வாழ்க்கை மிகமோசமான நிலைக்கு தள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

"போதையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் கிராம மட்ட விழிப்புணர்வு பேரணியும். கருத்தரங்கு நிகழ்வும் நேற்றைய தினம் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி கிராம சேவகர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாளொன்றுக்கு புகைப்பதற்காக 33 கோடி செலவும். மதுபானத்துக்காக 30 கோடி செலவும், புகைத்தலால் நாளொன்றுக்கு 72 பேர் மரணிக்கும் மதுபானத்தால் 62 பேர் மரணிக்கும் தேசத்தில் இருந்து புகைத்தல் விழிப்புணர்வை பற்றி பேசுவது மிகவும் கடினமான தொன்று.

போதை பொருள்பாவனை தொடர்பில் அனைவருக்கும் விழிப்புணர்வு உண்டு. ஆகவே விழிப்புணர்வுகள் சிலவேளைகளில் பயனற்றவையாக போகின்றது. எனவே போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வை நீண்டகால இலக்காக கொண்டு மாணவர்கள் மத்தியில் தான் ஏற்படுத்த வேண்டும். போதைப்பொருள் பாவனையில் ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்கள் அல்லது ஆரம்பிக்க கூடிய பருவத்தில் உள்ளவர்களை பாதுகாத்தல் பொருத்தமானதாக இருக்கும். பெண்கள் மிக முக்கியமாக இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.



புகைப்பவர்கள், மது அருந்தும் நபர்களை திருமணம் செய்தால் விரைவில் விதவை ஆக்கப்படுவீர்கள். இவை உண்மையான காரணிகள் என ஆய்வுகள் மூலம் நீரூபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இளையோர் மத்தியில் உள்ள தவறான அபிப்பிராயங்கள் அவர்களை போதைக்கு அடிமையாக்குகின்றது. அதாவது மதுபானம் அருந்தினால் அதிகநேரம் விழித்திருந்து படிக்கலாம் என்றும், அழகாக தோற்றமளிக்கலாம் என்று எண்ணுகிறார்கள். அது தவறானது. மதுப் பாவனை எந்தவொரு காலத்திலும் உடல் ஆராரோக்கியத்துக்கு உகந்ததல்ல. மேலும் எமது சமுதாயத்தை புலம் பெயர் சமுதாயம் சீரழிக்கிறது என்பதும் மிகவும் கவலைக்குரிய விடயம் ஆகும்.

முன்னைய காலங்களில் புகைத்தல், மதுபானம் அருந்தும் ஆண்களை பெண்கள் மதிப்பதில்லை. ஆனால் தற்காலத்தில் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி மாணவர்களிடையே புகைத்தல். மதுபானம் அருந்துதல் சாதாரண விடயம் ஆகிப்போயிருப்பதால் பெண்களுக்கும் அது சாதாரண விடயமாகிப் போயுள்ளது.

ஆனால் அது பெண்களுக்கு பெரிதும் ஆபத்தாக அமைகிறது. எனவே அவற்றை மிக தெளிவாக பெண்கள் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

வாழ்கைத்துணையை தேடி எடுக்கும் போது. மது பாவனைக்கும் புகைப்பழக்கத்துக்கும் அடிமையானவர்களை தவிர்த்து விடுங்கள் .

அவர்களை திருமணம் செய்தால் உங்களுடைய வாழ்க்கை மிகவும்மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்பது உண்மையான விடயம். எந்தவிதமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் சமூகத்தின் மனப்பாங்கில் மாற்றம் வரும் வரைக்கும் போதை பொருட்களை எமது சமூகத்தில் இருந்து ஒழிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தஹாம் சிறிசேன மக்களுக்கு உதவி

இலங்கையில் பேரனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளுக்கு பல்வேறு அரசியல் தரப்பினரும் விஜயம் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட. ஜனாதிபதியின் மகன் தஹாம் சிறிசேன விஜயம் மேற்கொண்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இரத்தின அயகம பிரதேசத்திற்கு தஹாம் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அவசியமான உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை அவர் வழங்கியுள்ளார். அயகம விஹாரையில் தங்கியிருக்கும் மக்களை தேடிச் சென்ற தஹாம் சிறிசேன மக்களின் தேவைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். அத்துடன் அந்த மக்களுக்கு தேவையான பொருட்கள். ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை வழங்கியுள்ளார்.

இங்கு பிரதேச மக்கள் தாங்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடி தொடர்பில் தஹாம் சிறிசேனவிடம் தெளிவுபடுத்தியுள்ளனர். தங்கள் பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நீண்டகாலமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு தாம் முகம் கொடுப்பதாகவும். எந்தவொரு அதிகாரியும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர். தற்போது ஜனாதிபதி தொடர்பில் நம்பிக்கையுடன் இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். எந்தவொரு அமைச்சர்கள் வருகை தராத அந்த பகுதிக்கு ஜனாதிபதியின் மகன் வருகை தந்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைவதாக அந்த பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டமொன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்.பிரதேச செயலகமும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை திணைக்களமும் இணைந்து இவ் விழிப்புணர்வூட்டும் நடைபவனியை முன்னெடுத்தது. யாழ்.பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி ஏ-9 பிரதான வீதியை சென்றடைந்து அங்கிருந்து பஸ்ரியன் சந்தியினூடாக மீண்டும் யாழ். பிரதேச செயலகத்தில் நிறைவடைந்தது. இதன்போது புகைத்தலுக்கு எதிரான பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பொதுமக்கள் தாங்கியவாறு போதைப்பொருளுக்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.யாழ். பிரதேச செயலக முன்றலில் பேரணியில் கலந்து கொண்டோர் மாதிரி சிகரெட்டை தீ மூட்டி எரித்தனர். (படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தமாகப் பிரித்தோத வேண்டாம் தம்மாலோக்க தேரருக்கு அறிவுரை வழங்கியது கொழும்பு நீதிமன்றம்

(கொழும்பு)

சத்தமாக பிரித் பாராயணம் செய்து அயலர்களைத் தொல்லைப்படுத்த வேண்டாம் என எலன் மெதினியாராமயவின் பீடாதிபதி உடுவே தம்மாலோக தேரருக்கு நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது. கொழும்பு நீதவான் துலானி அமரசிங்க இந்த அறிவுரையை வழங்கியுள்ளார்.

கொழும்பு பொல்ஹென் கொட எலன் மெதினியாராமயவிற்கு அருகாமையில் வாழ்ந்து வரும் பொதுமக்கள் தம்மாலோக தேரருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

அதிகாலையில் சத்தமாக பிரித் பாராயணம் செய்வதனால் தமக்கு உளவியல் ரீதியாக பாதிப்பு ஏற்படுவதாகவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சத்தமாக பாராயணம் செய்யப்படுவதாகவும் மனுவில் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட உள்ளிட்டவர்களும் இந்த வழக்கின் மனுதாரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சத்தமாக பிரித் பாராயணம் ஒலிபரப்புச் செய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியாது என தம்மாலோக தேரர் வெளியிட்ட எதிர்ப்பை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# கல்விக்காகக் காசு போடுங்கள்

(கொழும்பு)

"நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய நிவாரணங்களை வழங்குவதற்காக வங்கிக் கணக்கு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சீ.ஏ.மாரசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான நிவாரண நிதியை வழங்க விரும்பும் பொதுமக்கள் இலங்கை வங்கியின் 80912312 என்ற கணக்கிலக்கத்துக்கு வைப்புச் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஒருமாத அடிப்படைச் சம்பளமான 54 ஆயிரத்து 285 ரூபாவை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த யோசனை ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்டது. இருப்பினும் குறித்த யோசனைக்கு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள்" என்ற நம்பிக்கை உள்ளதாக பேராசிரியர் சீ.ஏ. மாரசிங்க தெரிவித்தார்.

எனினும், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தை வழங்குமாறு பொது அமைப்பொன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரிடமும் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது. அந்த கோரிக்கைக்கு செவிசாய்த்து சபாநாயகர் கரு ஜயசூரிய மட்டுமே. எழுத்து மூலமாக உறுதியளித்துள்ளார். (இ-7)

# 3 ஆசிரியர்கள் அடித்ததில் 3 மாணவர்கள் படுகாயம்

(கொழும்பு)

மூன்று பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் 3 ஆசிரியர்களினால் தாக்குதல்களுக்குள்ளான நிலையில், மாணவர்கள் மூவர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, நுவரெலியா மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களிலேயே இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பில், பிரபல்யமான பாடசாலையில் சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் 5 ஆம் தரத்தில் பயிலும் மாணவன் மீது தாக்கியமையால் அந்த மாணவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறித்த ஆசிரியை அம் மாணவனை டிரம்ஸ்ரிக்கினால் தாக்கியதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது. இதேவேளை. நுவரெலியாவில் கந்தபொல பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களில் நால்வர் மீது தாக்குதல் நடத்தியமையால் அதிலொரு மாணவன் பாதிப்படைந்துள்ளான்.

அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் மேற்படி நான்கு மாணவர்களும் சம்பவ தினம் மேலதிக வகுப்புக்காக பாடசாலையில் நின்று கொண்டிருந்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலை முடிந்ததும் அந்த நான்கு மாணவர்களும் வெளியில் சென்று சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்கு திரும்பிக் கொண்டிருந்த போது சிறிய வகுப்பில் கற்கும் மாணவியொருவர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்துள்ளார். அந்த மாணவியின் மீது நால்வரும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்ட ஆசிரியரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதனையடுத்தே அந்த ஆசிரியர் மேற்படி மாணவர்கள் நால்வரையும் அடித்து கண்டித்துள்ளார் என்றும் அதிலொருவரை உதைத்தமையால் அம்மாணவன் பாதிப்படைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி சம்பவம் தொடர்பில் கந்தப்பொல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்நிலையில். அநுராதபுரம். வன்னிபலு கொலவெவ பாடசாலையில் தரம் 7ஐச் சேர்ந்த் மாணவரொருவர். ஆசிரியரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் அநுராதபுரம்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவனை ஆசிரியர் தாக்கியதால் அம் மாணவன்பாடசாலை முடிந்து வீட்டுக்குச்செல்லும்வழியில்பலமுறை தலைசுற்றி மயங்கி விழுந்துள்ளதாகவிசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், பலுகொலவெவ நீர்தாங்கிக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் விழுந்து கிடந்த மாணவனை அவ்வழியாகச் சென்ற அதே பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவர்கள் இருவர் மீட்டு வீட்டில் கொண்டு சேர்த்துள்ளனர்.

மாணவன் உடல்நல பாதிப்புக்குள்ளாகி இருந்ததால் உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில். மாணவனின் தந்தை (பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றி வருகிறார்) அநுராதபுரம் பொலிஸின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவில் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1091

Search for people, places and things Nagendram Home

**வினுஜன்**

இது சுகர் மாத்திரைன்னு சொன்னீங்களே டாக்டர்! ஆமா...அதுக்கு என்ன இப்போ?



"கசக்குதே!"

**ராதிகா**

என்னவெல்லாமோ ஆகனும்னு ஆசைப்பட்டு...கடைசியில்



"குழந்தையாகவே இருந்திருக்கலாம்" என்ற ஏக்கத்தில் முடிகிறது வாழ்க்கை

**மதன்ராஜ்**

கையை கழுவிட்டு துடைக்க கர்சிப் இல்லைன்னா கூட...
கர்சிப் எடுக்கிற மாதிரியே பாண்ட் பொக்கட்டுக்குள்ள கையை விட்டு துடைச்சுக்கிறவனா இருந்தா நீயும் என் நண்பனே...

**காண்டீபன்**

ஆயுதங்கள் குவித்து வைத்திருக்கும் இடத்தை கிச்சன் என்றும் சொல்லாம்



**கலாவதி**

மனக்கஷ்டம்னு சொன்னா ஆள் ஆளுக்கு ஆறுதல் சொல்ல வாறாங்க...!



அதே பணக் கஷ்டம்னு சொன்னா எல்லாம் தெறிச்சு ஓடுறாங்க!

**நிர்மலன்**

எல்லோர் வாழ்விலும் சிரிக்கின்ற நேரத்தை விட,



அழுகின்ற நேரங்கள் தான் அதிகமாக இருக்கிறது..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘போதையை ஒழிப்போம்’ விழிப்புணர்வு பேரணி







படங்கள்:- பொ.சோபிகா











(யாழ்ப்பாணம்)

தூய்மையான.கோப்பாய் மத்தி செயற்றிட்டத்தின் 9 ஆம் கட்ட நிகழ்வாக "போதையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் கிராம மட்ட விழிப்புணர்வு பேரணியும் கருத்தரங்கு நிகழ்வும் நேற்றைய தினம் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி கிராம சேவகர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் மத்தி வள்ளியம்மன் சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வரை சென்று போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வுகளும் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றன.

கோப்பாய் மத்தி கிராம சேவகர் க.அனுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் சுகுணரதி தெய்வேந்திரம், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரி கு.கௌதமன், வலி. கிழக்கு பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி தலைமைப்பீட முகாமையாளர் திருமதி வசந்தி, கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர்கள், கோப்பாய் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டு போதைப் பொருள் எதிர்ப்பு தொடர்பான சுலோகங்களை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் பேரணியாகச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் விழிப்புணர்வு கருத்தரங்கும் நாடகமும் இடம்பெற்றன. (இ-9)

# ஹாசிம், லக்ஸ்மன் இடையே முரண்பாடு





(கொழும்பு)

அமைச்சு அலுவலகத்தை பகிர்ந்து கொள்வதில் கபீர் ஹாசிமிற்கும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவிற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச முயற்சியாண்மை அமைச்சர் கபீர ஹாசிம் தனது அமைச்சின் திட்டமொன்றுக்காக இராஜாங்க அமைச்சின் அலுவலக அறைகளை ஒதுக்கீடு செய்து கொண்டுள்ளார்.

இதனால் அந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள லக்ஸ்மன்யாப்பா அபேவர்த்தனவிற்கு அலுவலக வசதிகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதியினால் அரச முயற்சியாண்மை இராஜாங்க அமைச்சராக லக்ஸ்மன் யாப்பா நியமிக்கப்பட்டிருந்தார்.

இன்றையதினம் அவர் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள திட்டமிட்டிருந்தார்.

எனினும் அலுவலகம் தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்ளும் நிகழ்வுகளை ஒத்தி வைத்துள்ளார்.

அமைச்சர் தனது ஆவணங்களை புதிய காரியாலயத்திற்கு எடுத்துச் சென்ற போதிலும் அவற்றை வைத்துக் கொள்ளக்கூட போதிய ளவு இடவசதி கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக இந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சர் பொறுப்புக்களை எரான் விக்ரமரட்ன வகித்து வந்தார்.


அதன் போது 9 அறைகள் இராஜாங்க அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்தன எனவும் தற்போது அதில் ஆறு அறைகளை அமைச்சரவை அமைச்சர் கபீர் ஹாசிம் மீளப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் பெரிய பிரச்சினை அல்ல எனவும் எதிர்வரும் திங்கட்கிழமை அளவில் இடப் பிரச்சினை தொடர்பில் தீர்வு வழங்கப்படும் எனவும் அரச முயற்சியாண்மை அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவா விதாரண தெரிவித்துள்ளார். (இ-7)

# பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்று எமது மனங்களிலேயே இருக்கிறது

## வடக்கு சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக் பைகளின் சொகுசுக்குப் பழக்கப்பட்ட எங்களுக்கு அவற்றைக் கைவிடுவதற்கு மனம் இல்லாமல் இருக்கிறது.

பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்று சந்தைக்கு வராமல் அவற்றைக் கைவிட முடியுமா? என்றும் பலர் கேட்கிறார்கள்.

பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்று வேறு எங்கேயும் இல்லை. எமது மனங்களில்தான் இருக்கிறது.

பிளாஸ்ரிக் பைகளைக் கைவிட வேண்டும் என்று நாம் மனதளவில் உறுதியாகத் தீர்மானித்தால் மாற்று தானாக வரும் என்று வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் வாரம் தொடர்பான நிகழ்ச்சிகள் பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன.

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

கடதாசிப்பைகளையும் துணிப்பைகளையும் பயன்படுத்துவதைப் பலர் நாகரிகக் குறைவாகவும் அவமானமானதாகவும் க்ருதுகிறார்கள்.

இது எங்கள் மனதில் உள்ள பிரச்சினை. உண்மையில் சூழலை மாசுறுத்தாத, இயற்கைக்கு இசைவான பொருட்களைப் பயன்படுத்துபவர்களே நாகரிகம் மிக்கவர்கள், நற்பண்புகளைக் கொண்டவர்கள்.

அந்த வகையில் பிளாஸ்ரிக் பைகளுக்கான மாற்றங்களைச் சந்தையில் தேடாமல் முதலில் எமது மனங்களில் மாற்றத்தைத் தேடுவோம் என்றும் தெரிவித்துள்ளார். (இ-3)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கை மக்களுக்கு நல்லூர் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பொருட்களை மாவட்ட செயலக உத்தியோகத்தர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் இந்து இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மூளாய் இந்து இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றமுன்றலில் இடம்பெறும்.

சி.ஜெனார்த்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றஉத்தியோகத்தர் சர்வணமுத்து சிவரூபன், யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் செல்வராசா சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# செம்மணிப் பகுதியில் வீதி விளக்குகள் திருட்டு

செம்மணி இந்து மயானத்தை அண்டிய பகுதியில் பொருத்தப்பட்டிருந்த வீதிவிளக்குகள் திருடப்பட்டுள்ளன. இப் பகுதியில் வழிப்பறி, திருட்டு போன்றன அதிகளவில் இடம் பெற்று வருகின்றன.

இதனால் அப் பகுதியால் செல்லும் மக்கள் பயத்தின் மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-134)

# மூதூர் சம்பவத்தை கண்காணித்து வருகிறேன் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் - மனோ



திருகோணமலை மூதூரில் மூன்று சிறுமிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் இம்சை தொடர்பில் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பெண்கள்-சிறுவர் உரிமை செயற்பாட்டாளர்களின் உணர்வுகள் புரிகின்றன. எனினும் விசாரணைகள் தொடர்பில் எவரும் மனக்கிலேசம் அடைய வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். தற்போது விசாரணை மற்றும் வழக்கு தொடரப்பட மருத்துவ பரிசோதனை வழிகோலியுள்ளது. எனவே குற்றம் இளைத்தவர்கள் உள்ளார்கள்.

எந்த ஒரு காரணம் கொண்டும் குற்றம் இளைத்தவர்கள் தப்பிவிட இடம்தர முடியாது. அதேபோல் இனங்களுக்கு இடையேயான பதற்றமாக இதை பார்க்கவும் அனுமதிக்க முடியாது. இவை தொடர்பில், உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளேன். இந்த துர்ப்பாக்கிய சம்பவம் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகளை முதல்நாளில் இருந்து கண்காணித்து வருகிறேன். பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிபொலிஸ்மா அதிபர் நிமால் பெரேரா, பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் சந்திரகுமார மற்றும் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

ஏற்கனவே நடைபெற இருந்த அடையாள அணிவகுப்பு, பாதிக்கப்பட்டோரின் மருத்துவ தேவைகள் காரணமாக நாளை மறுதினம் 5ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அணிவகுப்பு இடம்பெற்றதாகவும், எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் சில ஊடகங்களில் வெளியான செய்தி தவறாகும். திங்கட்கிழமை அடையாள அணிவகுப்பை அடுத்து அடுத்த சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளார். (இ-3)




கேலிச்சித்திரம்

# கண்டியில் தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்

கண்டியிலும் தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மாலம்பே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மேலதிகமாக கண்டியிலும் தனியார் மருத்துவ கல்லூரியொன்று உருவாக்கப்படும் என குறிப்பிட்டுள்ள அவர் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு பதினைந்து இலட்சம் ரூபா கடனுதவி அளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அரசாங்க பல்கலைக் கழகங்களில் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள்போதாத காரணத்தினால், பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் தாம் விரும்பிய ஓர் பிரிவில் கற்கையைத் தொடர முடியும் என அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# பிளாஸ்ரிக் பயன்பாட்டுப் பொருட்களுக்கு பிரதியீடாக உள்ளூர் மூலங்களைத் தெரிதல்



ஞானமுத்து
அன்ரன் சாள்ஸ்
ஆசிரியர்
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்


அண்மைய காலங்களில் சர்வதேச புவிதினமும் அதனோடிணைந்த சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் எமது பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டமை புவி தொடர்பில் எமது கரிசனத்தை முற்படவைத்துள்ளது. இதனிடையே சில அரச நிறுவனங்களும் தமது எல்லைக்குட்பட்ட இடங்களில் பொலித்தீன் பாவிப்பதில்லை என தீர்மானங்களை எடுத்திருப்பதும் வரவேற்புக்குரியனவாக அமைந்துள்ளன. அத்துடன் இவ்வாரம் சுற்றுச்சூழல் வாரமாக கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

மாற்றம் வேண்டும் உலகின் போக்குகளுக்கேற்ப எம்மை மாற்ற வேண்டிய தேவைகள் உள்ள போதிலும் நாம் எமக்கேயுரித்தான சிறப்பம்சங்களினின்று பழைமை பேண வேண்டியுள்ளமை மறுக்க முடியாதுள்ளது. எமது பண்பாட்டுக் கோலங்கள் மாற்றம் கண்டு எண்மயயுகத்துட் (digital era) புகுந்து விட்ட நிலையில் இவ்வகை கட்டுரைகளின் தேவையை உணர்வோரும் அரிதே. இருப்பினும் முற்றுமுழுதாக பழைமையிற்தங்கியிராது பழைமையிற் புதுமைகளைப் புகுவிப்பதன் ஊடாகவேனும் பாதிபழைமை பேணும் அணுகுமுறை (semi conservative approach) ஊடாகப் பயணிப்பதே இக்கட்டுரையின் மையமாக அமைகிறது.

தற்போது எமது நாட்டில் எழுந்துள்ள திண்மக் கழிவுடனான சுற்றுச்சூழற் பிரச்சினைக்கு நாட்டு அரசே பாரிய சவால்களை எதிர் கொண்டுள்ளமையானது அரசபொறியின்பொருத்தமான எதிர்கால திட்டமிடலின்மையையும் தனிமனிதன் மட்டுமன்றி மக்கள் குழுமத்தின் சூழல் தொடர்பான விழிப்புணர்வற்ற தன்மையையுமே எடுத்துக் காட்டிநிற்கின்றது. பெரும்பாலான உணவகங்களில் பயன்படுத்தப்படுகின்ற பொலித்தீன் உக்கிச் சிதையும் திறன் (less decomposing ability) குறைவானதாகவும் காணப்படுகின்றது. அத்துடன் உணவுமீதியுடன் சூழலுக்குகொட்டப்படுவதனால் துர்மணம் வீசுவதுடன் அதனை உண்கின்றபிராணிகளுக்குப் பல இடையூறுகளையும் ஏற்படுத்துவதுடன் வடிகால்கள் நீரோட்டங்களை அடைக்கவும் ஏதுவாக அமைந்து விடுகிறது. எனவே இதனை இழிவாக்க இயற்கையான தாவரப் பகுதிகளை (வாழை இலை, வாழைமடல், தாமரை இலை, தேக்கின் இலை) பயன்படுத்த அனைத்து உணவகங்களும் தாமாக முன்வர வேண்டியது அவசியமாகும்.

அன்றேல் பயன்பாட்டிலுள்ள அனைத்து விதமான பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை தடுக்கவும் இயற்கையான தாவரப் பகுதிகளை பயன்படுத்தவும் இறுக்கமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவும் வழி உண்டாகும்.

எமது வாழ்வியலில் முன்னோர் உள்ளூர் வளங்களிலே தங்கியிருந்து பல்லாண்டு சுகமாக வாழ்ந்தமையும் அனுபவ உண்மையுமாகும். உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் மூலங்களாக பின்வரும் தாவரங்களான பிரம்பு, தென்னை, பனை, வாழை, சணல், மூங்கில், தாழை, நாளை.சம்பு.பன்புல், இலை, மருதி என்பவற்றைக் குறிப்பிடலாம். பிற்பட்ட போராட்ட காலங்களிலே கூட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடையும் இயற்கை உள்ளூர் உற்பத்திக்கான ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டமையானது மக் கள் மத்தியிற் சூழலின் பெறுமதியை உணரச் செய்தன. அதேவேளை இவ்வளங்கள் தொடர்பாக கணிசமான மதிப்பும்



பயன்பாட்டுத் திறனும் காணப்பட்ட போதிலும் சமாதான மற்றும் நல்லாட்சிக் காலங்களில் இவை பின் தள்ளப்பட்டுள்ளமை வேதனைக்குரியது.

எமது வட பிரதேசங்களில் இவ்வகையான இயற்கை மூலப் பொருட களைக் கொண்ட உற்பத்தி நடவடிக்கைகள் மிகச்சிறிய அளவிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் மத்திய, மாகாண அரசுகள் இவ்வகை உற்பத்தியை மேம்படுத்துவதில் எவ்விதமான காத்திரமான பங்கெதனையும் முன்னெடுக்கவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது. முன்னைய காலங்களில் வட பிரதேசம் பனைசார் உற்பத்திப் பொருட்களான ஓலைப்பாய், சுளகு, பெட்டி, கடகம், இடியப்பத்தட்டுகள், நீத்துப் பெட்டி போன்ற அன்றாடபாவனைப் பொருட்களுக்கும் கிழக்குப் பிரதேசம் புற்பாய் மற்றும் கடல்சார் கைவினை உற்பத்திப் பொருட்களுக்கும் பிரபலமாகக் காணப்பட்டன. இவை மாசுதரும் பிளாஸ்ரிக் இற்கான பிரதியீடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய வடபுலத்தில் ஆழமற்ற கடநீரேரிப் பிரதேசத்தின் பெரும்பாலான இடங்களில் பாய் இனை உற்பத்தி செய்யும் பிரதான மூலப் பொருளான பன்புல் அல்லது சம்பு என அழைக்கப்படும் தாவரப் போர்வை காணப்படுகின்றமையானது சூழலுக்கிசைவான இயற்கை சார் உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் ஏது நிலையினை தோற்றுவித்துள்ளது எனலாம். இத் தாவர வகை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேச சிறியரகக் குளங்கள், ஆற்றங்கரைகள் போன்றவற்றிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையான உள்ளூர் இயற்கை மூலப் பொருட்களைக் கொண்டு உற்பத்தியை மேற்கொள்ளும் போது பின்வரும் நன்மைகள் எய்தப்படலாம்.

1. உள்ளூரிலேயே தரமான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படல்.
2. உள்ளூர் மனிதவளத்தைப் பயன்படுத்தல்.
3. பாரம்பரிய "தறி" முறையில் புதியநுட்பங்களைப் புகுத்தல்.
4. உற்பத்திச் செலவை இழிவளவாக்கல்.
5. பல்வகை உற்பத்திப் பொருட்களைபெறும் வாய்ப்பு உருவாதல்.
6. உள்ளூர் பாவனையாளர்களின் திருப்தியை ஏற்படுத்தல்.
7. பிளாஸ்ரிக் சார் பொருட்களுக்கான பிரதியீடாக அமைதல்.
8. சூழல் மாசாக்க முதல்களை குறைத்தல்.
9. சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வடைதல்.
10. இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் பங்காளியாதல்.

இவ்வாறு பலபயன்களைத் தரக்கூடிய முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். மூலப் பொருளுக்கான தாவரப் போர்வையை மேலும் விருத்தி செய்யவும் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் சிறுகைத்தொழில் உற்பத்தி நிலையங்களை தோற்றுவித்தல் தொடர்பான திட்டங்களை காலதாமதமின்றி முன்னெடுக்கவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வார்களெனின் சிறப்பாக அமையும்.

இதன்மூலம் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனைகுறைவதுடன் சூழலுக்கு விடுவிக்கப்படும் திண்மக் கழிவின் குறித்த சத்வீத அளவும் குறைவடையவும் வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## துன்பத்தை விலக்கும் வழி

இது என்னுடையது அல்ல என்ற நினைப்புடன். வாழ்ந்து வந்தால் துயரங்கள் மனதை அண்டாது என்பதை விளக்கும் ஆன்மீகக் கதையை பார்க்கலாம்.

நாட்டை ஆண்டு வந்த மன்னனின் மனம் சற்றும் அமைதியின்றி தவித்து வந்தது. அவனது நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவனது சிறப்பான ஆட்சியின் காரணமாக வறுமை தொலைந்து போயிருந்தது. மக்கள் வரிச்சுமை இன்றி இன்பமாக வாழ்ந்தனர். கள்வர் பயம் இல்லை. கலைகள் தழைத்து வளர்ந்திருந்தன. புலவர்களும் அறிஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். நாடே சுபீட்சமாக இருந்த போதிலும். தன்னுடைய மனம் மட்டும் அமைதியில்லாமல் ஏதோ ஒரு சுமையோடு இருப்பதை மன்னன் அறிந்தான்.

இந்த நிலையில் அவன் ஆட்சி செய்த நாட்டில் உள்ள ஒரு ஊருக்கு ஜென் குரு ஒருவர் வந்திருப்பதாக மன்னன் அறிந்தான். அவரைச் சந்தித்தால் தன்னுடைய மனம் அமைதி அடைய ஏதாவது வழிகாட்டுவார் என்று எண்ணிய மன்னன் உடனடியாக அவரைப் போய் சந்தித்தான்.

ஊரின் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார் ஜென் குரு. மன்னனை அன்புடன் வரவேற்ற குரு. அவனிடம் மனம் விட்டுப் பேசினார். அப்போது அவனுடைய மனதில் இருக்கும் குழப்ப நிலையை உணர்ந்து கொண்டார்.

அரசே! நாட்டைக் காக்கும் பணிகள் அனைத்தும் சரியாக நடக்கிறதல்லவா? என்றார் குரு.

'ஆம்... சுவாமி! அதில் ஒரு குறையும் இல்லை. என் ஆட்சியின் கீழ் வாழும் மக்களும் கூட, எந்தக் குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் தான் வாழ்ந்து வருகிறார்கள்' என்றான் மன்னன்.

'அப்படியானால் உனக்கு என்ன குறை?' என்றார் குரு.

'அதுதான் எனக்கும் புரியவில்லை. சுவாமி. எல்லாம் நிறைவாக இருந்தும், என் மனம்கொஞ்சம்கூட அமைதி இன்றி தவித்து வருகிறது' என்றான் மன்னன்.

குரு சொன்னார். 'சரி... எனக்காக ஒன்று செய். உனது நாட்டை எனக்குக் கொடுத்து விடு'

இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தாலும் 'எடுத்துக் கொள்ளுங்கள் சுவாமி' என்று கூறினான் மன்னன்.

இப்போது மீண்டும் குரு. 'சரி... நாட்டை என்னிடம் கொடுத்து விட்டாய் நீ என்ன செய்வாய்?' என்றார்.

மன்னனோ. 'என்னுடைய வழிச் செலவுக்கு கொஞ்சம் பொருள் எடுத்துக் கொண்டு எங்காவது சென்று விடுவேன் என்றான்.

குரு மென்மையாக சிரித்தார். 'ஏனப்பா... நாட்டையே எனக்குக் கொடுத்து விட்ட பிறகு, அதில் உள்ள கஜானாவும் என்னுடையது தானே. அதில் இருந்து பொருளை எடுக்க உனக்கு ஏது உரிமை?' என்று மடக்கினார்.

சற்றே திகைத்தாலும் 'நீங்கள் சொல்வது சரிதான். நான் இப்படியே புறப்படுகிறேன். எங்காவது போய்... ஏதாவது ஒரு வேலை செய்து பிழைத்துக் கொள்வேன்' என்று எதற்கும் தயாராய் இருப்பதாகச் சொன்னான் மன்னன்.

உடனே குரு. 'ஏதாவது வேலை செய்யப்போகிறாய். அந்த வேலையை என்னிடம் செய்யலாமே' என்றவர். 'நீ என்னுடைய பிரதிநிதியாக இந்த நாட்டை பராமரித்து வா. உன்



செலவுக்கு அரண்மனை பொக்கிஷத்தில் இருந்து ஊதியம் பெற்றுக் கொள். எனக்கு எப்போது வசதிப்படுமோ,. அப்போது நான் வந்து கணக்கு வழக்குகளைச் சரி பார்த்துக் கொள்கிறேன்' என்றார்.

சரி.. என்று ஒப்புக்கொண்டு நாடு திரும்பினான் மன்னன். கடகடவென்று இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

திடீரென ஒரு நாள் மன்னனைக் காண்பதற்காக அரண்மனைக்கு வந்து சேர்ந்தார் குரு.

அவரை அரண்மனை வாசல் வரை வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான் மன்னன்.

குருவை மன்னனுக்கான ஆசனத்தில் அமரச் செய்தான்.

'என்ன அரசே! நாடு எப்படி இருக்கிறது?' என்று கேட்டார் குரு.

'சுபீட்சமாய் இருக்கிறது சுவாமி. கணக்கு வழக்குகளைக் கொண்டு வருகிறேன். எல்லாம் சரியாக இருக்கிறதா? என்று நீங்கள் ஒரு முறை பார்த்து விடுங்கள்' என்று கணக்கு வழக்கு குறித்து வைத்திருக்கும் குறிப்பேட்டை எடுத்துவர எழுந்தான் மன்னன்.

அவனைத் தடுத்து நிறுத்திய குரு. 'கணக்குகள் இருக்கட்டும். உன் மனநிலை இப்போது எப்படி இருக்கிறது?' என்றார்.

'என் மனம் முன்' எப்போதும் இல்லாத வகையில் அமைதியாய் இருக்கிறது' என்றான் மன்னன்.

'அது ஏன் என்ற காரணம் அறிந்து கொண்டாயா?' என்ற குருவின் கேள்விக்கு மன்னனால் பதிலளிக்க முடியவில்லை.

குருவே தொடர்ந்தார். 'இதற்கு முன்பு நீ செய்த ஆட்சிக்கும் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நீ செய்த ஆட்சிக்கும்ஏதாவது மாறுதல்உண்டா?' என்று நிதானமாக கேட்டார் குரு. 'இல்லை' என்றான் மன்னன்.

'அதே அரண்மனை. அதே அதிகாரிகள். அதே படை. அதே மக்கள். ஆனால் இப்போது உனக்கு நிம்மதியிருக்கிறது. அப்போது அது இல்லை. அதற்கான காரணம் என்ன?' என்றார் குரு.மன்னன் விழித்தான்.

குரு விளக்கத் தொடங்கினார். 'அப்போது இந்த ஆட்சி. அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்திருந்தாய். இப்போது இது வேறு ஒருவருடையது. நாம் அவரிடம் பணியாற்றும் ஒரு பிரதிநிதி என்றிருக்கிறாய். 'இது என்னுடையது' என்று நீ எண்ணிய வரையில் உன் மனம் துயரத்தால் திண்டாடியது. 'இது எனதில்லை' என்ற எண்ணம் உனக்குள் வந்ததும். உன் மனதின் துயரம் விலகி அமைதி நிலவுகிறது.

எந்தப் பொருளையும் என்னுடையது என்று எண்ணும்போதுதான். அதன் இன்ப- துன்பங்கள் நம்மை தாக்குகின்றன. இன்பம் இலகுவானது. வந்த வேகத்தில் சென்று விடும். ஆனால் துன்பம் கடுமையானது. அது நம்மை மூழ்கடிக்கும் சக்தி படைத்தது. உண்மையைச் சொல்ல வேண்டுமானால். இந்த உலகம் நமதல்ல. அதைப் படைத்த வன் யாரோ. நமது உடலும் நமக்குரியதல்ல. அதை நமக்கு அளித்தவர் யாரோ.

ஆகவே 'இது என்னுடையது அல்ல' என்ற நினைப்புடன் நீயே இந்த இராச்சியத்தை ஆட்சி செய்து வா. அந்தப் பற்றற்ற நிலை உனக்கு வந்து விட்டால். உன்னுடைய மனதை துயரங்கள் அண்டாது' என்ற குரு. மன்னனிடம் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

## 06.2017 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1539 - ஸ்பானிய நாடுகாண்பயணி ஹெர்னாண்டோ டெ சோட்டோ புளோரிடாவை ஸ்பெயினுக்காக உரிமை கொண்டாடினான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான்படை பாரிஸ் நகரில் குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் நகரில் இடம்பெற்ற போரில் ஜேர்மன் படைகள் வெற்றி பெற்றன. நட்பு அணி நாடுகள் முழுமையாகப் பின்வாங்கின.
- 1965 - நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.
- 1984 - அம்ரித்சரில் சீக்கியர்களின் புனிதப் பொற்கோயிலுள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர்.
- 1998 - ஜேர்மனியில் கடுகதி தொடருந்து ஒன்று பாதையை விட்டு விலகியதில் 101 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - 2001இல் அகற்றப்பட்ட கண்ணகி சிலையை முதல்வர் மு. கருணாநிதி மீண்டும் திறந்து வைத்தார்.
- 2007 - கொழும்பில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2007 - தெற்கு சீனாவில் யுனான் பகுதியில் இடம்பெற்ற 6.4 அளவு நிலநடுக்கத்தில் பலர் கொல்லப்பட்டுப் பலத்த சேதம் ஏற்பட்டது.

### பிறப்புகள்

- 1808 - ஜெபர்சன் டேவிஸ். அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் அரசுத் தலைவர் (இ. 1889)
- 1906 - வால்டர் ராபின்ஸ். ஆங்கிலேயத் துடுப்பாளர் (இ. 1968)
- 1924 - மு. கருணாநிதி. முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்
- 1931 - ராவுல் காஸ்ட்ரோ. கியூபாவின் 18ஆவது அரசுத் தலைவர்
- 1940 - சரவண நாராயணசாமி. மலேசிய எழுத்தாளர்
- 1961 - லோறன்ஸ் லெசிக். படைப்பாக்கப் பொதுமங்கள் நிறுவுநர்
- 1966 - வசீம் அக்ரம். பாகிஸ்தானியத் துடுப்பாளர்
- 1986 - ரஃபேல் நடால். எசுப்பானிய டென்னிசு வீரர்

### இறப்புகள்

- 1657 - வில்லியம் ஹார்வி. ஆங்கிலேய மருத்துவர் (பி. 1578)
- 1924 - பிரான்ஸ் காஃப்கா. செக்-ஆஸ்திரிய எழுத்தாளர் (பி. 1883)
- 1963 - இருபத்தி மூன்றாம் யோவான் (திருத்தந்தை) (பி. 1881)
- 1977 - ஆர்ச்சிபால்ட் ஹில். நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (பி. 1886)
- 2000 - ஜெய்சங்கர். தமிழ்த் திரைப்பட நடிகர் (பி. 1938)
- 2009 - இரா. திருமுருகன். தமிழறிஞர் (பி. 1929)
- 2013 - அதுல் சிட்னிஸ். செருமானிய-இந்திய ஊடகவியலாளர் (பி. 1962)
- 2013 - ஜியா கான். அமெரிக்க-இந்திய நடிகை (பி. 1988)
- 2014 - கோபிநாத் முண்டே. மகாராட்டிர அரசியல்வாதி (பி. 1949)

### சிறப்பு நாள்

- மாவீரர் நாள் - (உகண்டா)
- மாபோ நாள் - (அவுஸ்திரேலியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 160 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 80 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 450 | 450 | 400 | 400 |
| தக்காளி | 160 | 200 | 100 | 120 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 100 | 60 |
| கோவா | 150 | 200 | 150 | 160 | 200 | 180 |
| கரட் | 200 | 600 | 200 | 240 | 400 | 120 |
| பூசணி | 70 | 100 | 50 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 40 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 150 | 200 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 100 | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 140 | 100 | 100 | 120 | 160 | 120 |
| கறிமிளகாய் | 250 | 400 | 140 | 100 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 60 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 200 | 400 | 180 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்பளை | 180 | 100 | 130 | 160 | 160 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 20 | 40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 100 | — | 220 | 240 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 100 | — | — | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 |
| அரப்பனா | 80 | 60 | — | — | — | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஊரும் சதமல்ல; உற்றார் சதமல்ல;
> பேரும் சதமல்ல; பெண்டிர் சதமல்ல...
> – பட்டனத்தடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காரண காரியத்தை கண்டறிவதே அறிவு

அறிவு என்றால் என்ன? மெய்ப்பொருள் காண்பது அறிவு என்கிறார் வள்ளுவர். மெய்ப் பொருள் என்பது காரண காரியத் தொடர்பின் பாற்பட்டது.

ஆக, காரண காரியத் தொடர்பை அறிந்தால் மெய்ப்பொருள் அறிந்ததாகப் பொருள்படும். எனினும் மெய்ப்பொருள் அறிவதில் பலருக்கு விருப்பக் குறைவு உண்டு.

உண்மையைக் கண்டறிவதில் விருப்பக் குறைவா? இஃதென்ன என்று நீங்கள் விழிக் கலாம்.

ஆனாலும் காரண காரியத் தொடர்பை அறி வதில் பலருக்கு விருப்பமும் இல்லை; உடன் பாடும் இல்லை.

ஏனெனில் மெய்ப்பொருள் எப்போதும் எங் கள் இயல்பு வாழ்க்கைக்கு சவாலாகவும் எதி ராகவும் இருப்பதுதான்.

இயல்பு வாழ்க்கை என்பது இருள் சூழ்ந் தது; அஞ்ஞானம் கொண்டது; நிலையற்றதை நிலையானது என்று நினைப்பது. ஆனால் நிலையற்றதை நிலையற்றது எனக் கூறுவது மெய்ப்பொருள்.

எனது காணி, எனது வீடு, எனது உறவு, எனது சொத்து என்றிருக்கக் கூடிய ஒரு மனி தனுக்கு, ஐயா! இவை எதுவும் உனதல்ல. முன்பு வேறொருவருடையதாக இருந்தவை இன்று உனக்கானதாக இருக்கின்றது. நாளை வேறொருவருடையதாக மாறும்.

சிலவேளை இந்தப் பூமியிலே அந்தப் பொருள் இல்லாமலும் போகலாம்.

தமிழ்நாட்டின் தியாகராஜ நகரில் ஏழு மாடி கொண்ட சென்னை சில்க்ஸ் என்றொரு மிகப் பிரமாண்டமான புடைவை வர்த்தக நிலையம் இருந்தது.

அது ஒரு சில தினங்களுக்கு முன்னர் தீயில் எரிந்து அப்படியே அழிந்தொழிந்து போனது. இப்போது அந்த சென்னை சில்க்ஸ் இல்லாமல் போயிற்று.

ஒரு சிறு தீயின் வலிமை எத்தனையோ கோடி ரூபாய்களை ஒரு கணப் பொழுதில் காவு கொண்டு விட்டது.

இதுதான் உலகம். நிலையான சொத்து என்று நினைத்தது நிலையற்றதாகிவிட்டது. இந்த உண்மையை ஏற்பதற்கு எவரும் உடன் பாடில்லை.

இந்த உண்மையை ஏற்றால் மயன் என்ற சிற்பியால் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட இலங்கா புரியில் எல்லா மக்களும் மகிழ்வோடும் நீண்ட ஆயுளோடும் சுகத்தோடும் ஆத்ம ஞானத் தோடும் வாழ முடியும்.

இதென்ன மயன் அமைத்த இலங்கை என்று சொல்கிறீர்களே என்று நீங்கள் முணு முணுப்பதும் கேட்கிறது.

மண்டோதரியின் தந்தை மயன். ஐந்திறம், பிரணவ வேதம் என பல நூல்களின் சிருஷ்டி கர்த்தா அவர்.

இலங்கைக்கு வந்த அனுமன் இலங்கா புரியை தீயிட்டு எரித்தானல்லவா? தீயினால் எரியுண்ட நாட்டை மண்டோதரியின் தந்தை யும் இராவணனின் மாமனுமாகிய மயன் என்ற சிற்பி மீள்நிர்மாணம் செய்தார் என்பது புராணக் கதை.

இலங்கையை மயன் திருத்தி அமைத்தாரா? அல்லது தேவசித்தி விஸ்வகர்மா நிர்மாணித் தாரா? என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க,

உலகிலேயே மிக அழகான ஆபத்து இல் லாத நாடு இலங்கை என்பதை நாம் அனை வரும் மறுதலிப்பு இன்றி ஏற்றுக் கொள்வர்.

ஆனால் அந்த அழகிய நாட்டில் யுத்தம் செய்த அழிவுக்குப் பின்னர் இயற்கை அழிக் கிறதே ஏன்?

இங்குதான் காரண காரியத் தொடர்பு கண் டறியப்பட வேண்டும். யுத்தம் முடிந்த மே மாத காலப்பகுதியை இயற்கை அனர்த்தம், தான் பிடித்துக் கொண்டு செய்யும் அழிவு ஏன்? எதற்கு? உண்மையை கண்டறிக.

# இந்துப் பாரம்பரிய இசைப்படைப்புக்கள்

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற் றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வடமாகாண கலாசார நிலைய வலைய மைப்புக்கள் ஏற்பாடு செய் துள்ள இந்துப் பாரம்பரிய நடன மற்றும் இசைப் படைப்புக்கள் இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணி க்கு யாழ். வீரசிங்கம் மண்ட பத்தில் யாழ். மாவட்டச் செய லாளர்நா.வேதநாயகன்தலை மையில் இடம்பெறும். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை ஞாயிற் றுக்கிழமை 8 மணியிலிரு ந்து மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** சட்டநாதர் வீதி, பருத்தித் துறை வீதியில் கல்வியங் காடு சந்தையிலிருந்து நல் லூர் கோவில் வரை, நல் லூர் குறுக்கு வீதி, செம் மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூம கள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ் வரி அம்மாள் வீதி, புறாடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலயார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையி ரத கடவை வரை, நாயன் மார வீதி, குகன் வீதி, பொன் னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியி லிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம் மணிவளைவு வரை, நெடுங் குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவ லடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து ஏ9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருத புரம, வியாவில், கருங் காலி, காரைநகர் சிவன் கோவி லடி, பொன்னாலை கிருஸ் ணன் கோவிலடி, பொன் னாலை வீட்டுத்திட்டம், யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்க லைக்கழக இயற்கை விஞ் ஞான பீடம், பிரிட்டிஸ் கவுன் சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், Cey- Nor பவுண்டேஷன் லிமிற்றெட், மாவட்ட கடற்றொ ழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினி யறிங் பி.எல்.சி, நாயன் மார்கட்டு Carlton Sports Network (CSN), சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும் **வவு னியா பிரதேசத்தில** கந்த சாமி கோவில் வீதி, மில் வீதி, 1ம் குறுக்குத்தெரு, 2ம் குறுக்குத்தெரு, சூசைப்பிள் ளையார்குளம், பஜார் வீதி, ஓவியா விடுதி. இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, S.V.R. அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன் னார் பிரதேசத்தில் விடத்தல் தீவு கிராமம், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கள்ளி யடி, இலுப்பைக்கடவை, மூன் றாமபிட்டி, கணேசபுரம், வெள்ளாங்குளம் நீர்ப்பாச னத் திணைக்களம், விடத் தற்தீவு வைத்தியசாலை, கணேசபுரம்இராணுவமுகாம ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கன்னிகா தானம் என்பதன் பொருள் என்ன?**

செல்வம் நிறைந்த மணமகனுக்கு வறுமையில் இருக்கும் மண மகளின் தந்தை எவ்வித பொருளும் கொடு க்காது வாங்காது மணம கள் வீட்டால் கொடு க்கும் ஆடையை மண மகளுக்கு உடுத்தி தாரை வார்த்து கொடுப் பது.

கன்னிகாதா னம் செய்தவர் மணமகன் வீட் டாரிடம் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது.

(தொடரும்)

# பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

**LITTLE MASTER'S MONTESOORI** பாலர் பாட சாலையின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தெல் லிப்பழை பொலிஸ் நிலை யத்திற்கு அருகிலுள்ள **LITTLE MASTER'S MON TESOORI** மைதானத்தில் இடம்பெறும்.

கி.சதீஸ்குமார் தலை மையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக தெல்லிப்பழை பிர தேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை வீமன்கா மம் மகா வித்தியாலய அதி பர் எஸ். இராமநாதன், தெல் லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பளளி அதி பர் த.வாமதேவன், தெல் லிப்பழை பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி. க.ஈஸ்வரி, தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங் கத் தலைவர் ந.உமாகரன், தெல்லிப்பழை பிரதேச செய லக அபிவிருத்தி உத்தி யோகத்தர் நா.சதீஸ்குமார், சங்கானை பிரதேச செயலக காணிவள அபிவிருத்தி உத்தியோகத்தார் த.ஜெயந் தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# சாஸ்திரங்கள்

✦ **தற்பெருமை பேசுவது, பெரியோரை அவமதிப்பது முதலாகிய பாவங்களைச் செய்பவர்களை இருட்டில் பூதங்களை விட்டு சதைப் பிண்டங்களை பிய்த்து உண்ணச் செய்தல்**

**-க்ஷாரகர்த்தமம் (கருடபுராணம்)**



# திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அதிதியாக வந்த அந்தணர் ஆணவம் துலங்க பிரம்ம தேவனை வணங்கவும் வணங்காமல் வணங்காமுடியாக வந்தமர்ந்தது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பிரம்மதேவரின் பிரசங்கம் தடைப்பட்டது. பிருகு முனிவரின் நடத்தை அவன் கோபத்தைக் குத்திக் கிளறியது. கண்கள் சிவந்தன, புருவங்கள் துடித்தன.

என்ன பிருகு முனியே! தர்ம, அதர்மங்களை அறிந்தவர் தாமே நீங்கள்? அவை மரியாதை என்னவென்று யாரும் உமக்குக் கற்றுக்கொடுக்கவில்லையா? எல்லாம் அறிந்தவர் தாங்கள் என்ற என் கணிப்பு களங்கப்பட்டுவிட்டது. நீர் ஒரு முழு மூடர் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது.

அவைத் தலைவனான எனக்கு அளிக்கவேண்டிய மரியாதையை அளியாமல் ஆசனத்தில் அமரலாமா? மாமுனி என்ற மமதையா? அல்லது இடையறாத் தவம் புரிந்த வன் என்ற இறுமாப்பா? இந்த அவையில் இருக்கும் அமரர் களைவிட எந்த விதத்தில் தாங்கள் தரம்மிக்கவர்? என்று பிரம்மதேவன் பெருங்குரல் எடுத்து ஏசினார். (தொடரும்)

## ஆபத்தினை உணர்வோம்! அவதானமாக இருப்போம்!!

முகத்தில் ஏற்படும் கடிகாயம் மிகவும் ஆபத்தானது. எனவே செல்லப்பிராணிகளை முத்தமிடக்கூடாது. தெருநாய்கள், காட்டு விலங்குகளுக்கு உணவளிக்க முற்படக்கூடாது.

செல்லப்பிராணி தெரு மிருகத்தினால் கடிக்குள்ளானால் மிருக வைத்தியரை நாடவும்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அடக்கப்படாத மனம், நெறியில் செலுத்தப்படாத மனம் நம்மை என்றென்றும் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும்; நம்மைக் கிழிக்கும். நம்மைக் கொல்லும். அடக்கப்பட்ட நெறியில் செலுத்தப்பட்ட மனமோ நமக்குப் பாதுகாப்பளிக்கும்; விடுதலையைத் தரும்.

❖ இயற்கைக்கு ஒத்துவாழ்தல் என்பதன் பொருள் தேக்கமே, மரணமே. இவ்வீட்டை மனிதன் கட்டியது எப்படி இயற்கைக்கு ஒத்துவாழ்ந்தா? அல்ல இயற்கையை எதிர்த்துப் போர் புரிந்தே. இயற்கையோடு புரியும் ஓயாத போரே மனித முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது; அதனோடு ஒத்துவாழ்வதல்ல.

❖ பிறரிடம் உள்ள தீய தன்மைகளை எண்ணவேண்டாம். அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.

❖ மேல் நோக்கும் முன்னேற்றத்தை தடுப்பது எதுவோ கீழ் நோக்கும் வீழ்ச்சிக்குத் துணைபுரிவது எதுவோ அது தீமையே. மேல் நோக்கிச் செல்லவும் சமமான நிலையை எய்தவும் உதவுவது எதுவோ அது நன்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி






வல்வை வி.கழகம் நடத்தும் பருத்தித்துறை லீக் மற்றும் வடமராட்சி லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான 07நபர் கொண்ட உதைபந்தாட சுற்றுப் போட்டியின் (01.06.2017) அன்று நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி வி.கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இப்போட்டியில் 1:0 என நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

பொம்மர்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆசிய சம்பியன்ஷிப்

## மகாஜன தங்க மங்கை அனித்தா கோலூன்றிப் பாய்தலில் சாதனை



ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான இரண்டாவது தகுதி காண் சுற்றுப் போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் 3.46 மீற்றர் உயரம் பாய்ந்த அனித்தா, தனது பழைய சாதனையை (3.45 மீற்றர்) முறியடித்தார்.

தேசிய மட்ட திறந்த போட்டியில் 3.41 மீற்றர்கள் பாய்ந்து சாதனை படைத்த அனித்தா, அண்மையில் நடைபெற்ற ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான முதலாவது தகுதி காண் போட்டியில் 3.45 மீற்றர்கள் பாய்ந்து தனது சாதனையை முறியடித்தார்.

(01.06.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது தகுதிகாண் போட்டியில் மீண்டும் தனது சாதனையை 3.46 மீற்றர் என உயர்த்தியுள்ளார். (க)

# கலைமதியின் உதைபந்தாட்டம் பொம்மர்ஸ், றோயல் வெற்றி



கலைமதியின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் (2017.06.01) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகத்தை 3:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது வதிரி பொம்மர்ஸ் வி.கழகம்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வல்வெட்டி கருணாகரன் வி.கழகத்தை 1:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது ஊரெழு றோயல் வி.கழகம். (க)

# கும்ப்ளேயின் பயிற்சியை புறக்கணித்த ஹோலி



இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டிக்கு இந்திய அணி பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் அனில் கும்ப்ளே பயிற்சியளிக்க வந்ததும் விராட் ஹோலி வெளியேறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட்ஹோலி, பயிற்சியாளர் அனில் கும்ப்ளே இடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது.

இதையடுத்து இருவரையும் சமாதானப்படுத்த இந்திய கிரிக்கெட் நிர்வாகிகள் முயற்சி செய்து வருகிறார்கள்.

இங்கிலாந்தில் நடக்கும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வருகிற 4ஆம் திகதி பாகிஸ்தானுடன் மோதுகிறது.

முக்கியமான இந்தப் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் துடுப்பாட்ட பயிற்சி யில் ஈடுபட்டு கொண்டிருந்த இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி அங்கு பயிற்சியாளர் அனில் கும்ப்ளே சில கருவிகளை கொண்டு வரும் படி கூறியதாகவும் உடனே விராட் ஹோலி பயிற்சியில் இருந்து வெளியேறியதாகவும் தகவல் வெளிவந்துள்ளது. இதனால் இருவரிடையே மோதல் அதிகரித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

# மண்ணின் மைந்தர்கள் நினைவு வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

மண்ணின்மைந்தர்கள் நினைவு வெற்றிக்கிண்ண விளையாட்டு விழா 10 ஓவர் கொண்ட கிரிக்கெட் தொடர்இன்று சனிக்கிழமை தொடர்ந்து இடம்பெறும்.

எமது மண்ணின் மைந்தர்கள் நினைவாக மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியள்வில் நடைபெறவுள்ளது.

யுத்தகாலங்களில் படுகொலை செய்யப்பட்டும் விபத்து மற்றும் அகால காலங்களினால் இளம் வயதில் எம்மை விட்டு பிரிந்த எமது மண்ணின் மைந்தர்களை கௌரவப்படுத்தவும் நினைவு கூரவும் இவ் விளையாட்டு விழா இடம்பெறவுள்ளது.

வடமாகாண ரீதியாக அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்துநாளை 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

தொடர்புக்கு ம.ரகுவரன் 077 112 9329, ச.தர்சன் 077 224 7578, ச.பிரசாந் 077 933 3068, த.தினோஜன் 077 247 4483, த.[illegible] 077 78 8 5307. (க)

# சண்டிலிப்பாய் பிரதேச இ.கழக 29ஆவது விளையாட்டுவிழா

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 29ஆவது பிரதேச இளைஞர் விளையாட்டுவிழா இடம்பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 29வது பிரதேச இளைஞர் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மாலை 3.00மணிக்கு இடம்பெறவுள்ளது. வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் க.உஷாந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரனும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் வண.ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளாரும், யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் ஆர்.காமராஜ் ஜும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.கிருபாகரனும் கலந்து கொள்வார்.

உதைபந்தாட்ட இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இதன் போது இடம்பெறவுள்ளது.

உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகமும் சில்லாலை இளைஞர் கழகமும் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு நோய்...

ராபத்தை தவிர்ப்பதற்கான டெக்ஸ்ட்ரன் (Dextran) என்ற மருந்து வகையில் பாரிய பற்றாக்குறை நிலவுவதாகவும் இதன் காரணமாக நோயாளர்கள் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

தற்போது சுகாதார அமைச்சுக்குள் இருக்கின்ற இந்த மருந்துகள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டவை என்பதுடன், அவை நோயாளர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு தகுதியற்றது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ள நீர் வழிந்தோடிக் கொண்டிருக்கும் நிலையில் முக்கிய சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளதாகவும், டெங்கு நோய் இதில் முக்கியமானதென்றும் அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவ நலிந்த சில்வா கூறியுள்ளார்.

டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது தேவைப்படுகின்ற ஒத்துழைப்புக்களை எவ்வித நிபந்தனைகளும் இன்றி வழுங்குவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

தற்போதைய அனர்த்த நிலைமையில் விஷேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய வைத்திய முகாம்கள் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பதாகவும் அந்த சங்கம் கூறியுள்ளது. (செ-11)

## உயிரிழப்புகள்...

மற்றும் வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 208 ஆக உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவ் அனர்த்தங்களில் சிக்கி 72 பேர் காயமடைந்துள்ள நிலையில் 92 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 175, 216 குடும்பங்களைச் சேர்ந்த 677, 241 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 1, 735 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் 9, 432 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாதிப்படைந்த 17, 446 குடும்பங்களைச் சேர்ந்த 65, 817 பேர் 321 பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ...ரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இன்னும் 50 வருட...

க்கைகளை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கால்வாய்கள் மற்றும் நீர்வழிகளை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவது சம்பந்தமாகவும், நகர பகுதிகளில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவது சம்பந்தமாகவும் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சரியான சூழல் மதிப்பீடுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காரணமாக அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதாகவும், தெற்கு அதிவேக வீதியானது பல அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணமாக இருப்பதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார்.

அத்துடன் பேரழிவுகள் ஏற்படுவதற்கு முன்னர் எச்சரிக்கை விடுக்க முடியாமல் போவது பாரிய பிரச்சினையாகும் என்றும், மக்கள் பாதுகாப்புககாக நிலையான மக்கள் மையத்தை கட்டியெழுப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க மேலும் கூறியுள்ளார். (செ-11)

## இடைக்கால அறிக்கை...

கையை இலங்கை மத்திய வங்கி மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு ஆகிய இணைந்து தயாரித்துள்ளன.

இடைக்கால அறிக்கையின் சுருக்கத்தை சமன் ஏக்கநாயக்க, தொலைபேசி வழியாக பிரதமருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த வரவு செலவுத் திட்ட வரையறைக்குள் எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறும், அதற்கு தேவையான நிதியை வெளிநாட்டு அபிவிருத்தி நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் ஆகிய இலங்கையின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் நிவாரணங்களை வழுங்க இரண்டு பில்லியன் ரூபாயை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்க திறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைய, பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மக்களின் பொருளாதார செயற்பாடுகளை வழமைக்கு கொண்டு வரும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நாடு முழுவதும் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்கு கொண்டு வரத் தேவையான நிதி சம்பந்தமாக முழுமையான அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதி மதியம் 12 மணிக்கு வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கி மற்றும் தேசிய திட்டப் பணிப்பாளருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார். (செ-11)

## 115020 பேர்...

ள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக முல்லைத்தீவில் காணப்படும் கடும் வரட்சி காரணமாக கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மணலாறு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய ஆறு பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த 35 670 குடும்பங்களை சேர்ந்த 115 020 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் அதி[illegible] பாதிக்கப்பட்டு குடிநீர் வசதியின்றி தவிக்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு குறிப்பிட்டுள்ளது. (செ-281)

## யாழ்.வாள்வெட்டு...

யாழ்ப்பாண பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேவா, பிரகாஷ் உட்பட மூன்று பேர் கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கியூ பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தியா, இலங்கைக்கு இடையிலான போதைப்பொருள் கடத்தல் மற்றும் தங்கம் கடத்தல் தொடர்பான விடயங்களில் இவர்களுக்கு தொடர்புள்ளதா என தொடர்ச்சியான விசாரணைகளை கியூ பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக இவர்கள் தொடர்பான சட்டவிரோத செயற்பாடுகளை உள்ளடக்கிய மேலதிக தகவல்கள் மற்றும் விபரங்களை யாழ்ப்பாண பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்து வந்ததுடன் அவர்களை கைது செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இருப்பினும் குறித்த நபர்கள் மீது கஞ்சா மற்றும் தங்க கடத்தல்கள் போன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரிலேயே தற்போது இந்திய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மேலதிகமாக பல விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இவர்களை நாளைமறுதினம் திங்கட்கிழமை திருச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சூழலில் அவர்கள் கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இந்திய கியூ பிரிவினருக்கு கைதானவர்கள் தொடர்பான அழுத்தங்கள் எவையும் இலங்கையில் இருந்து கிடைக்கப்பெறவில்லை.

மேற்குறித்த சந்தேக நபர்கள் வாள்வெட்டு குழுக்களை இயக்கி சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிவித்து மேற்குறித்த நபர்களை யாழ்ப்பாண பொலிஸார் தேடி வந்தனர். இவர்கள் தலைமறைவாகி உள்ளதாகவும் குறிப்பிட்டு இவர்கள் தான் ஏனையவர்களை இயக்குகிறார்கள் என ஒவ்வொரு சட்டவிரோத சம்பவங்களுக்கும் பொலிஸார் இவர்களை தொடர்ச்சியாக காரணம் காட்டி வந்தனர். அத்தோடு குறித்த மூன்று சூத்திரதாரிகளை கைது செய்தாலே சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் பொலிஸ் தரப்பினர் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள கடந்தும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை அக்கறையுடன் விரைவாக மேற்கொள்ளவில்லை என அறியக் கிடைத்துள்ளது.(செ-9)

## க.பொ.த (சா/த)...

விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உதவும் வகையிலேயே மேற்படி கால நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கால நீடிப்பானது பழைய புதிய பாடத் திட்டத்தில் விண்ணப்பிக்கும் நாட்டில் உள்ள அனைத்து விண்ணப்பதார்களுக்கும் இது பொருத்துடையதாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நூறாவது நாளாக...

ள்ள தமது உறவுகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வவுனியாவில் காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த தொடர்போராட்டம் இன்றையதினம் நூறாவது தினத்தை எட்டியுள்ள நிலையில் இன்று இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (செ-11)

## பாடசாலை மாணவி...

க்கு மட்டும் செயலமர்வு உள்ளது என கூறி குறித்த ஆசிரியர் அழைத்து சென்ற நிலையில் ஆசிரியருக்கு பல தடவைகள் தொடர்பை ஏற்படுத்திய பொழுதும் மாணவி கருத்தரங்கில் இருக்கின்றார் சிறிது நேரத்தில் எடுங்கள் எனக் கூறுகின்றாரே தவிர மாணவியை தொடர்பு கொள்ள முடியவில்லை என தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் மாணவியின் சகோதரனால் முறைப்பாடு செய்யப்பட்டதனை அடுத்தே சில மணிநேரத்துக்குள் மாணவியும் ஆசிரியரும் விசுவமடு பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாணவி கிளிநொச்சி சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். கைதான ஆசிரியர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்று எங்கும் ஆசிரியர் கூறியபடி கருத்தரங்குகள் எவையும் நடைபெறவில்லை என முதலாம் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆசிரியரை ஆஜர்படுத்த இருப்பதாக தர்மபுரம் பொலிஸ நிலையைப் பொறுப்பதிகாரி டி.எம்.சத்துரங்க தெரிவித்துள்ளார். (செ-312)

## மூடிய பாடசாலை...

கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் எதிர்வரும் ஒரு சில வாரங்களுக்கு சீருடை அணிந்து பாடசாலைக்கு வர வேண்டிய கட்டாயம் இல்லை எனவும் அவ் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இனவாதிகளுக்கு...

கம் செயற்படுகின்றது. அரச மற்றும் தனியார் ஊடகங்கள் இன மத கட்சி வேறுபாடு இன்றி இந்த வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பிராந்தியத்தில் செயல் முறையிலான ஊடக செயற்பாடு காணப்படுகின்றது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி நாம் சுதந்திரம் அடைந்த போது [illegible] ஆசியத்தில் ஜப்பானே செல்வ [illegible] விளங்கியது. வளங்களுடன் நாமும் சிலோன் என்ற நன்மதிப்புடன் சர்வதேச ரீதியில் நற்பெயரைப் பெற்றிருந்தோம். அக்காலப்பகுதியில் தற்போது உலகில் வளர்ச்சி கண்ட நாடாக திகழும் கொரியா மிகவும் பின்தங்கிய நாடாக இருந்தது. கொரியா என்பது சேரிப்பகுதியை குறிக்கும் சொல். அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட நாட்டில் இன்று எமது இளைஞர்கள் தொழிலாளர்களாக பணிபுரிகின்றனர்.

நாட்டை வளமிக்க அபிவிருத்தி கொண்ட நாடாக மேம்படுத்துவதற்காக தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தெற்கில் சில சிங்கள கடும்போக்காளர்கள் இதனை சீர்குலைக்கப் பார்க்கின்றனர். பதவியை இழந்தவர்கள் இதன்மூலம் பதவிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றனர். இதே போன்று வடக்கிலுள்ள சில கடும்போக்காளர்களும் இவ்வாறு செயற்படுகின்றனர்.

தெற்கில் இளைஞர்கள் துப்பாக்கியை ஏந்தியது போன்று வடக்கிலும் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தினார்கள். நகக்கண்ணால் கிள்ளி எறிய வேண்டிய பிரச்சினை யுத்தத்திற்கு வழிவகுத்தது. இவ்வாறான நிலை நாட்டில் மீண்டும் ஏற்படாதிருப்பதற்காகவே ஜனநாயகம், நல்லிணக்கம் ஆகியவற்றுடன் அபிவிருத்தி என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். சகல மக்களுக்கும் சகல உரிமையும் உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் சர்வதேச சமூகத்தினால் ஓரம்கட்டப்பட்டிருந்த இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் முழுமையான ஆதரவு கிட்டியுள்ளது. இதனை விரும்பாத சிலர் நாட்டில் மீண்டும் இனவாதத்தை தூண்டி விட முயற்சிப்பதாகவும் குற்றம்சாட்டினார். இதற்கு அரசியல் அதிகாரமும் காரணம்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் சிலர் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். ஒரு சிலரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பதவியை இழந்தவர்களை மீண்டும் பதவியில் அமர்த்த இவர்கள் துணைபோகின்றனர். பொருளாதார ரீதியில் நாம் முன்னோக்கி பயணிக்க வேண்டும்.

இதற்கு நாம் உலகுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். ஜெனிவாவில் எமக்கு 48 நாடுகள் உதவின. இது முன்னொரு போதும் கிடைத்திராத அமோக ஆதரவு. இலங்கை தொடர்பில் இன்று சர்வதேச ரீதியில் நற்பெயர் உண்டு. காலங்கடந்த சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். எமது மாணவர்களின் உயர் கல்விக்கு நாம் உதவ வேண்டும். பொது மக்களுக்கு உண்மையை ஊடகங்கள் கூற வேண்டும்.

பூகோள ரீதியிலான நன்மைகளைப் பயன்படுத்தி நாட்டை மேம்படுத்த வேண்டும். ஊடகங்களும் இதற்கு உதவ வேண்டும். கடந்த காலங்களில் வடக்கிலும் தெற்கிலும் பல ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளானதோடு, படுகொலை செய்யப்பட்டார்கள். நாட்டில் தொடர்ச்சியாக குடும்ப ஆட்சி ஒன்றை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

காவி உடை தரித்த சிலர் சிங்கள முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர். அதற்கு பதவியை இழந்த, நாட்டில் மீண்டும் இரத்த ஆற்றை பெருக்கெடுக்கச் செய்தேனும் பதவியை கைப்பற்ற நினைக்கும் சில அரசியல்வாதிகள் அதற்கு உரமூட்டுகின்றார்கள். நிதியுதவி அளிக்கின்றார்கள் உதவி செய்கின்றார்கள் என மங்கள தனது உரையில் குறிப்பிட்டார்.(செ-11)

## கைரேகை பதிவு கருவி திருட்டு

கிளிநொச்சிக் கரைச்சி பிரதேச சபையின் பணியாளர்கள் தமது வரவினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தி வைக்கப்பட்டிருந்த கைரேகை பதிவுக் கருவியைக் காணவில்லை என கரைச்சி பிரதேச சபை செயலாளரால் நேற்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் மாலை வேலை முடிவடைந்து வீடு செல்லும் பொழுது பணியாளர்களால் வெளியேறுவதற்கான கைவிரல் அடையாளம் பதியப்பட்டது எனவும் நேற்று காலையில் பார்க்கும் பொழுது அக் கருவியினைக் காணவில்லை எனவும் குறித்த முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டினை அடுத்து குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-312)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிரிவினைவாதிகள்...

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநுராதபுரத்தில் சேகரிக்கப்பட்ட நிவாரண பொருட்கள் அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று அமைச்சில் நடைபெற்றது.

அங்கு பொருட்களை பொறுப்பேற்ற அமைச்சர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

ரவூப் ஹக்கீம் மேலும் கூறுகையில்,

எல்லா பக்கங்களிலும் பிரிவினைவாதிகள் இருக்கின்றார்கள். எனினும் பொலிஸார் இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே எமது வேண்டுகோள். தவறிழைக்கும் எவராக இருந்தாலும் தராதரம் பாராது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மதத் தலைவராக இருக்கலாம். ஏதாவது பாதுகாப்பை எதிர்பார்ப்பவராக இருக்கலாம். யாராயினும் தண்டனை பொதுவானதே. பல இனவாத செயற்பாடுகள் முஸ்லிம் மக்களை அரசாங்கத்திற்கு எதிரானவர்களாக காட்டுவதற்கு அவர்களை தூண்டிவிடும் நோக்கத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அரசாங்கத்தின் உயர்பீடம் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வித ஆதரவையோ ஒத்துழைப்பையோ வழங்கவில்லை. எனினும் பொலிஸாரின் நடவடிக்கைகள் அவ்வளவு சிறப்பானதாக அமையவில்லை என்பது எனது கருத்து.

அது தொடர்பில் விமர்சனங்கள் எழுவதை தவிர்க்க முடியாது. அதில் உண்மையும் இருக்க முடியும். இது தொடர்பில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருக்கின்றோம்.

இதன் பின்னர் மதத் தலைவர்கள் இவ்வாறு முறையற்ற விதத்தில் நடந்துகொண்டால் அது தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அவரும் அதற்கு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார் என ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


### தவறவிடப்பட்டுள்ளது

காந்தியழகன் சிறிசனாத் என்பவருடைய முக்கிய ஆவணங்கள், உடுபுடைவைகள் அடங்கிய பிறவுண் கலர் பயணப்பொதி யாழ். தனியார் பஸ் நிலையத்திற்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 604 1063
077 311 6602 (9109)

### O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!

100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்

நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்

Diploma in Tourism & Hotel Management 9ம் அணி

3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்

புதிய பிரிவு ஆரம்பம் ஜூன் 6 செவ்வாய் காலை 10மணி

பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY

175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம். (தி-6726)


## பெண் பிரதிநிதித்து...

தேசப்பிரிய, பாராளுமன்றில் பெண் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நேற்று நீர்கொழும்பு நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

மக்களினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளே சட்டத்தை ஆக்குகின்றனர். இலங்கை மொத்த சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்கள். இந்த கணக்கின்படி பார்த்தால் பாராளுமன்றத்தில் 120 பெண்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

இருப்பினும், இருப்பதோ 13 பேர் மாத்திரமே. இது அதிகரிக்கப்பட வேண்டும். பெண்கள், மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதமாக செயற்பட்டுக்காட்ட வேண்டும். நாம் பேசும் விடயங்கள் ஊடகங்கள் மூலமாக சிலரிடம் மாத்திரமே செல்கின்றன. சரியான செய்தி மக்களுக்குப் போய்ச் சேர்வது குறைவு எனவும் மகிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


### கார் வாடகைக்கு

புதிய திருமணக்கார் நாள் ஒன்றுக்கு 8000 மட்டும். நாள் வாடகைக் கார் 2000 மட்டும். இரவு நேரப் பயணிகள் கார் சேவை ஒரு கிலோ மீற்றருக்கு 40 ரூபாய் மட்டும்.

துர்க்கா கார் சேவை
077 833 1414 (9107)

### IELTS

IELTS Test Prep

வெளிநாடுகளில் STUDENT VISA வில் படிப்பதற்கு அவசியமான IELTS எளிமையான முறையில் கற்பிக்கப்படும்

- வேலைசெய்வோரின் நலன்கருதி மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்
- பிரத்தியேக வகுப்புக்களும் (PERSONAL CLASSES) உண்டு.

தொடர்புகளுக்கு: 0768226236

49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (தி-6731) V2 TRAVELS

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1985 மிருகசீரிடம் 3ம் பாதமுடைய அரச நிரந்தர தொழில்நுட்ப உத்தியோகத்தரான மணமகனுக்கு கிரகபாவம் 30 இற்கு உட்பட்ட தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு
077 194 6272 (9062)


## ஞானசாரரின் கை...

நேற்று முன்தினம் மாலை 7 நாடுகளின் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர். இவர்களுடனான சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அசாத் சாலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த அணியினரே ஞானசார தேரரின் பின்னால் ஒரு பலம் பொருந்திய சக்தியாக இருந்து அவர்களை இயக்கி வந்தனர். ஆனால் இப்போது நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவே ஞானசார தேரரை கைது செய்யவிடாமல் பாதுகாத்து வருகின்றார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புகளுக்கும் ஞானசார தேரரை அழைத்து செல்வது அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவே. கடந்த ஆட்சியின் போது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத அடக்குமுறைகள் காரணமாகவே நாட்டின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும் தற்போதைய மைத்திரி - ரணில் அரசாங்கமும் முஸ்லிம் மக்களை ஏமாற்றியுள்ளதுடன் சிங்கள இனவாதிகளுக்கு மீண்டும் களம் அமைத்துக் கொடுத்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அசாத் சாலி தனது உரையில குற்றம்சாட்டினார். (செ-11)

## நாமல் தாக்கல்...

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள வழக்கை விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கிற்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த அடிப்படை எதிர்ப்பை நிராகரித்த கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சமத் மதநாயக்க வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க செய்திருந்த அடிப்படையற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தன்னை கைது செய்ததாக நாமல் ராஜபக்ஷ தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னை கைது செய்து தடுத்து வைத்த தன் மூலம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாகவும் இதற்கு இழப்பீடாக 200 மில்லியன் ரூபாய் வழங்க வேண்டும் என நாமல் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## பத்து படகுகளை அனுப்பியது...




சிறிலங்கன் விமான சேவையின் விமானம் மூலம், இந்த அவசர உதவிப் பொருட்கள் நேற்று முன்தினம் காலை எடுத்து வரப்பட்டன.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள ரங்கல கடற்படைத் தளத்தில் வைத்து இலங்கைக்கான அவுஸ்ரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சிசன், இந்தப் படகுகளை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் முறைப்படி கையளித்தார்.

மீட்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் 10 இறப்பர் படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் கையளிக்கப்பட்ட நிலையில்,

உடனடியாகவே இந்தப் படகுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (செ-11)


### அச்சகத்துக்கு கணினி இயக்குநர்கள் தேவை

அச்சகக் கணினி வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் (பெண்) தேவை.
04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 - 12.00 மணிக்கு இடையில் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிரிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே :077 306 8982 (9093)

### வேலைவாய்ப்பு!

ANDRA PRINTERS நிறுவனத்திற்கு அனுபவமுள்ள

- புத்தக வடிவமைப்பாளர் (Book Layout Designer)
- தமிழ், ஆங்கிலம் Computer Typing தெரிந்தவர்கள்
- கணக்கு உதவியாளர்

தேவை! (தி-8707)

- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

திங்கட்கிழமை (05.06.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ANDRA PRINTERS 379,Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

### AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

T.P: 021 205 7455

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்.

இன்றைய தினம் ஒடியல் கூழை இலவசமாகப் பெற்று உண்டு மகிழுங்கள்

கைதடி கிழக்கு, கைதடி.
147, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021 222 5001 (தி-8705)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org